ஓமேகா



# ஸ்ரீ ஐயப்பன் பாமாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க. மகேந்திரன்

# ஸ்ரீஐயப்பன் பாமாலை




ஒமேகா வெளியீடு

ஒமேகா கணித விஞ்ஞான வள நிலையம்

478/31B, அலுத்மாவத்தை வீதி,

கொழும்பு 15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சுவாமியே சரணம் ஐயப்பா!*

# அருள்மிகு ஐயப்பன் தல வரலாறு

அழகான கொஞ்சும் கேரளத்தை உருவாக்கிய பரசுராமர் பல்வேறிடங்களிலிருந்தும் பிராமணர்களை அங்கு குடியேற்றினார். பின்னர் பதினெட்டு மலைகளில் தர்ம சாஸ்தாவின் திருக்கோயில்களையும், பதினெட்டு கடலோரப் பகுதிகளில் ஸ்ரீதேவியின் அருட்கோயில்களையும் அமைத்தார். அந்த பதினெட்டு மலைக்கோயில்களுள் சபரிமலை சாஸ்தா கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. எரிமேலி தர்ம சாஸ்தா கோயில், அச்சன் கோயில், ஆரியங்காவு, குளத்துப் புழை, பொன்னம்பலமேடு முதலியன அந்த பதினெட்டுள் சிலவாகும். ஏனையன எங்கு அமைக்கப் பெற்றன என்பது இது வரை சரியாக அறியப்பெறவில்லை. நாம் அறியக்கிடைத்து அருளை குவிக்கும் சபரிமலை சாஸ்தாவின் அருமை பெருமைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் இங்கு அறிந்து அருள் பெறுவோம்.

துர்க்கையால் கொல்லப்பட்ட மகிஷாசுரனின் தங்கை மகிஷி என்னும் அரக்கி தன் அண்ணனின் மரணத்தால் கோபமுற்று தேவர்களை பழிக்குப்பழி வாங்க எண்ணி பிரம்மனைக் குறித்து தவம் இயற்றி வரம் பெற்றாள். அரிகரசுதனைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்னும் வரம் பெற்று மகிஷி தேவர்களைக் கொடுமைப்படுத்தினாள். இவளிடமிருந்து தப்பித்து நிலைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ எண்ணி அமுதுண்ண விரும்பிய தேவர்களும் பிற அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்து இறுதியாக அமுது பெற்றனர். ஆனால் அமுதினை தேவர்களிடமிருந்து அசுரர்கள் பறித்துப் பெற்று உண்ணத் தொடங்கினர். தேவர்களின் வேண்டதலுக்கிணங்கிய திருமால் அழகிய கன்னி (மோகினி அவதாரம்) உருக்கொண்டு அசுரர்களை மயக்கி ஏமாற்றி அமுதினை வாங்கி தேவர்களனைவர்க்கும் பரிமாறினார். பின்னர் இந்தக் கன்னி உருகொண்ட திருமாலுக்கும், சிவனுக்கும் பிறந்தக் திருக்குழந்தைக்கு தர்மசாஸ்தா என பிரம்மன் பெயர் சூட்டினார். தர்மசாஸ்தாவின் தோற்றம் சில வைணவ ஐக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

நெடுங்காலமாகத் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் வழிபட்டுவந்த திராவிடப் பரதேவதைகளான மாசாத்தான், கண்டன்சாத்தா, சாத்தப்பன் முதலியவை சாஸ்தாவையே குறிப்பன. இந்த தேவதைகளின் வழிபாடு ஆரியப்பிராமணர்களின் சைவ வைணவக் கொள்கைகளாலும் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல் பரவிய புத்தமதக் கோட்பாடுகளாலும் தழுவப் பெற்று மாற்றியமைக்கப் பெற்றன. புத்தமதத்திற்கே உரியதான சரணம் போடும் முறையும் கூட்டம் கூட்டமாக யாத்திரை செல்லுதலும் பகவான் பகவதி சரணம் விளித்தலும் புத்த மதத்திலிருந்து தழுவிக் கொள்ளப் பெற்ற வழக்கமாகும்.

குளத்துப்புழையில் கொஞ்சும் பாலகனாக ஆரியங் காவில் இல்லறம் பூண்டு ஆண்டு தோறும் திருக்கல்யாணக் காட்சி தரும் சாஸ்தாவாக அச்சன் கோவிலில் பூர்ணாவும், புஷ்கலாவும் சேவைபுரிய தியானத்திலிருக்கும் வானப் பிரஸ்த சாஸ்தாவாக சபரிமலையில் துறக்கோலம் பூண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமுத்திரைக் காட்டி யோக நிஷ்டையிலிருக்கும் ஐயனாக அருள் பொழிகிறார் அரிகரசுதனாக தர்மசாஸ்தா.

சபரிக்கோயில் 1950-ல் தீயோர் சிலரால் தீயிடப் பட்டது. மீண்டும் பக்தர்கள் பலரால் மிகப்பொலிவுடன் நிர்மாணிக்கப்பட்டது.

## ஐயப்பன் அவதாரம்

கேரளத்தில் சேரப் பேரரசு சிற்றரசர்கள் ஆட்சியில் பாண்டி தேசக் கொள்ளையர்கள் சபரிக்கோயிலை கொள்ளை யடித்து சாஸ்தாவின் விக்கிரகத்தை நாசப்படுத்தி பூசாரியைக் கொலை செய்தனர். கொள்ளையர் தலைவன் உதயன் என்பவன் பந்தளம் அரண்மனையிலிருந்து அரசகுமாரியை கடத்திச்சென்று தன் பாளையத்தில் சிறை வைத்தான். பூசாரியின் மகன் ஐயந்தன் (சேன்னன்) மீண்டும் சாஸ்தாவை நிர்மாணிக்கவேண்டி பொன்னம்பல மேட்டில் தவம் செய்தான். அவன் கனவில் சாஸ்தா தோன்றி "நீ உதயன் பாளையத் திலிருந்து அரசகுமாரியை மீட்டு வந்து அவளை மணம்புரிந்து கொள்வாயாக! உங்களிருவருக்கும் பிறக்கும் குழந்தை சாஸ்தாவை நிர்மாணிக்கும்" எனக் கூறவே அது போல் அரச குமாரியை ஐயந்தன் மீட்டு வந்து மணம் புரிந்தார். மார்கழித் திங்கள் சனிக்கிழமை உத்திர நட்சத்திரம் பஞ்சமித் திதி விருச்சிக லக்கினம் கூடிய நன்னாளில் அழகு மிகு ஆண் மகவு பிறந்தது. "அக்குழந்தை சாஸ்தாவின் அவதாரமே" என அசரீரி ஒலித்தது. சபரியில் பரசுராமர் பிரதிஷ்ட்டை செய்தது தர்ம சாஸ்தா. சாஸ்தாவின் அவதாரம் ஐயப்பன். அவதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே தவிர ஐயப்பன் சாஸ்தாவினின்றும் வேறுபட்டவர் அல்லர். அவதாரத்தின் நோக்கம் இரண்டு (1) உதயன் முதலிய துஷ்டர்களை ஒழித்து அவரால் சீர்குலைக்கப் பெற்ற சபரிக்கோயிலைச் சீர்திருத்தி சாஸ்தாவை நிர்மாணித்தல். (2) சாதி சமய வேறுபாடின்றி ஏழை செல்வந்தர் பேதமின்றி காமக் குரோதங்களை நீக்கி பிரம்ம தத்துவத்தை யாத்திரையாக்கி சாஸ்தாவின் வழிகாட்டின் ஆர்வம் ஏற்படுத்த போதனை அளித்தல்.

ஐயந்தனிடம் சீரும் சிறப்புமாக ஐயப்பன் வளர்ந்து வருங்கால் ஒரு நாள் ராஜசேகரன் எனும் பந்தள மன்னன் பம்பா நதியோரம் வேட்டையாட வந்தான். குழந்தை பேறு இல்லாத மன்னன் வனத்திடையே குழந்தை அழும் ஒலி கேட்டு திடுக்கிட்டு ஐயந்தனின் பர்ணசாலையை அடைந்து தொட்டிலில் கிடந்த ஐயப்பனை தூக்கி வாரித் தழுவிக் கொண்டான். குழந்தையும் மன்னனை மிகுந்த பாசத்துடன் கட்டித் தழுவி பிரிய மறுத்தது. ஐயந்தனும் ஐயப்பன் தன் அவதார நோக்கத்தை நிறைவேற்ற மன்னனிடம் வளர்வதே இறையருள் என்பதனை தன் யோக ஞானத்தால் உணர்ந்து மன்னனிடம் குழந்தையைக் கொடுத்தருளினார் மன்னனும் மகிழ்ந்து ஏற்று நாடு திரும்பினார்.

ஐயப்பன் கல்வி, வேதம், போர் முறை முதலிய சகலகலைகளையும் தெளிவாக கற்றார். குருதட்சிணை யாக குருநாதர் மகனின் குருடு ஊமைத்தன்மைகளை நீக்கினார். இவ்வாறு ஐயனின் புகழ் அதிகமாகி வரும் பொழுது ராணிக்கு ஆண் மகவு ஒன்று பிறந்தது. மன்னன் ஐயப்பனுக்கு முடிசூட்டு விழா நடத்த ஏற்பாடு செய்தான். மந்திரி நாட்டைத் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள சதிசெய்து மணிகண்டனை அழிக்கத் திட்டமிட்டான். வேட்டுவன் நாடாள்வதா? எனப் பிரச்சாரம் செய்தான். அது பயனற்றுப் போகவே செய்வினைகளால் மணிகண்டன் உடம்பு புண்ணாகச் செய்தான். பரமசிவன் துறவியாக வந்து குணப்படுத்தினார். பின் தன் மகன் பிறந்த நாள் விழாவிற்கு மணிகண்டனை அழைத்து அமைச்சன் விஷம் கொடுத்தான். அதனை மணிகண்டன் கருடபஞ்சாஷரம் ஜபித்து வென்றார். பிறகு அமைச்சன் ராணியின் நல்ல உள்ளத்தைக் குழப்பி அவள் மகன் ராஜேந்திரனுக்கு தான் பட்டம் சூட்ட வேண்டும் என வாதாடினான். அவன் சதிக்கு உடந்தையாக ராணியும் தீராத தலைவலி என நடித்தாள். அமைச்சனால் ஏவப்பட்ட வைத்தியர் புலிப்பாலினால் செய்யப்படும் மருந்தினால்தான் ராணியின் தலைவலி தீரும் என்றார். தாயின் தலைவலியை தீர்க்கப் புலிப்பால் கொண்டுவர ஐயப்பன் புறப்பட்டார். மிகுந்த கவலைக்குப் பின் மன்னன் ஐயப்பனை வழியனுப்பி உணவுக்கட்டு எடுத்துச் செல்லும்படியும், முக்கண்ணனாகிய சிவனை நினைத்துக் கொள்ள முக்கண்ணுடைய தேங்காயை எடுத்துச் செல்லும்படியும் பணித்தார். மன்னன் தந்த பொருட் களை ஐயப்பன் "இருமுடி" கட்டாக அமைத்து வில்லும் அம்பும் ஏந்திப் புறப்பட்டார். அமைச்சன் மகிழ்ந்தான். மன்னன் மனக்கவலையை பரமசிவன் பொறுப்பில் விட்டு நிம்மதி யடைந்தார்.

ஐயப்பன் காட்டு வழியில் பொன்னம்பல மேட்டில் தவமியற்றி வந்த தாய் தந்தையரைக் கண்டு மகிழ்ந்தார். பின்னர் புலிக்கூட்டம் ஒன்றைக் திரட்டிக்கொண்டு புலியின் மீது அமர்ந்து புலிப்பாலுக்காகத் தாய்ப் புலியுடன் மற்ற விலங்குகளும் பின் தொடர ஐயப்பன் பந்தள நாடு திரும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுகண்ட மக்கள் ஐயப்பனை தெய்வமென வியந்து வழிபட்டுப் போற்றினர். ஐயப்பன் மன்னன் அடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஆனால் மன்னன் ஐயப்பனை தெய்வமென உணர்ந்து வணங்கி தந்தை மகன் என்ற உறவில் செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டார். புலிக்கூட்டத்தை திருப்பி அனுப்பி மக்கள் அச்சம்போக்க வேண்டினார். அதன் படி ஐயப்பன் ஆணையிட விலங்குகள் வனம் திரும்பின. அமைச்சர் தன் தவறு உணர்ந்து ஐயப்பன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். தாயும் தான் செய்த தவறுக்காக வருந்தினார். ஐயப்பன் ஆறுதல் கூறினார். ஐயப்பனிடம் அரசரும் குருவும் மக்களும் உபதேசம் கேட்டனர். இதனாலேயே குருவின் குரு என ஐயப்பன் அழைக்கப்படுகின்றார். சாஸ்தாவை பிரதிஷ்டை செய்யும் நோக்கத்துடன் செல்வதாகவும் மீண்டும் சந்திப்பதாகவும் கூறி ஐயப்பன் பந்தளத்திலிருந்து விடை பெற்றார்.

ஐயப்பன் முதலில் காயங்குளம் மன்னரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். பெருந்தொல்லைக் கொடுத்து வந்த வாபர் என்னும் கடற்கொள்ளைக்காரன் பற்றிக் கேட்டறிந்தார். வாபர் இஸ்மாயில் கோத்திரத்தில் பர்ஹுவியா வகுப்பில் ஹலேப் எனும் ராஜ்யத்தில் பாத்துமாவின் மகனாகப் பிறந்த ஒரு அரேபிய முஸ்லீம். வாபர் தன் மந்திர இந்திர ஜாலங்களால் பல் பெரும் வீரர்களை வென்று அடிமைகளாகச் சேர்த்துக் கொண்டார். தொழில் கப்பல் ஓட்டுவதும், உப்பு வியாபாரமும். ஆனால் கொள்ளையடிக்கும் பெரும் பொருளை ஏழைகளுக்கு வாரி வழங்கினார். வாபரின் ஆற்றலையும் நல் உள்ளத்தையும் அறிந்த ஐயப்பன் அவரை வென்று நண்பராக்கிக் கொள்ள முடிவு செய்தார். கருநாகப் பள்ளி கடற்கரையில் வாபரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்து பெரும் போர் நடத்தி ஐயப்பன் வென்றார். வாபர் ஐயப்பனின் திறமையையும் பெருமையையும் உணர்ந்து அடிபணிந்தார். வாபரை இனிய சொல் பேசி ஆறுதல் கூறி நல்வழிகாட்டி நண்பராக்கிக் கொண்டார் ஐயப்பன். தர்மசாஸ்தா சிலையை நிர்மாணிக்கும் பணியில் வாபரும் அவர் படைகளும் ஐயப்பனுடன் சேர்ந்து பணியாற்ற முடிவு செய்தனர். அதற்காக வாபர் முஸ்லீம் மதத்தை விட்டு இந்து மதத்தில் சேர்ந்து விடுவதாக கூறினார். அதற்கு ஐயப்பன் உலகிற்கு பணியாற்ற மதம் எதுவாயினும் கவலையில்லை. மதம் மாறவேண்டாம் என்று கூறி தெளிவாக்கினார்.

பின்னர் ஒருமுறை பந்தளத்தை தாக்கிய உதயனை ஐயப்பனும் வாபரும் எதிர்த்துப் போரிட்டு பின்வாங்கி ஓடச் செய்தனர். ஐயப்பனின் வீரத்தைப் புகழ்ந்து பந்தள மன்னன் ஐயனின் இரு கைகளுக்கும் "வீரச்சிருங்கலை" எனும் பொற் சங்கிலி வழங்கி கௌரவித்தார். ஐயப்பன் வாபரை சேனாநாயகராக்கி படைகளுடன் எருமேலியில் தங்கி மேற்கு தேசங்களிலிருந்து சபரிமலைக்கு வரும் படைகளுக்குத் துணையாக இருக்கும் படிச் செய்தார்.

ஐயப்பன் அம்பலப்புழை, செம்பகேசரி, சேர்த்தலை, பொரும்பாவூர், பரப்பனாடு, சாலக்குடி முதலிய இடங்களுக்குச் சென்று சிறுசிறு உட்பூசல்களை ஒழித்து உதயனை எதிர்த்துப் போரிட பெரும்படை திரட்டி போர் பயிற்சிகள் அளித்து பல படைக்குழுக்களை ஏற்படுத்தினார். பந்தளம், அம்பலப்புழை, ஆலங்காடு ஆகிய மூவிடங்களிலும் தலைமைச் சங்கங்கள் அமைத்து மற்ற இடங்களை இவற்றின் கிளைகளாக முறைப்படுத்தினார். சேர்த்தலை தண்ணீர் முக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழவக் குடும்பத்தலைவனான சீரப்பன் சிறமூப்பனுடன் தங்கி படைகளுக்கு ஆயுதப் போர் கற்பிக்கும் காலத்தில் சீரப்பன் மகள் ஐயப்பன் பால் காதல் கொண்டாள். நித்திய பிரம்மச்சாரியான ஐயப்பன் அவளுக்கு ஞானோபதேசம் செய்து மனம் தெளிவித்தார். பந்தள மன்னனிடமிருந்து பெற்ற இரு பொற் சங்கிலிகளையும் அவளுக்கு வழங்கினார். அவற்றை கையில் அணிந்தவுடன் அவளுக்கு உலகாசைகள் விட்டொழிந்தன. இறுதியாக சபரியில் சென்று முக்தி பெற்றாள். சிலகாலத்திற்கு பின்னர் இந்தச் சங்கிலிகளின் மகிமையை அறிந்த பந்தள மன்னன் ஒருவன் ஏராளமான பொருள் கொடுத்து சீரப்பன் குடும்பத்திலிருந்து அவற்றை விலைக்கு வாங்கிவிட்டான் என்று கூறப்படுகிறது. இன்றும் சபரிமலையில் வழிபட்டு வெடிவைக்கும் உரிமை சீரப்பன் பரம்பரைக்கு கொடுக்கப்பெற்று வருகிறது.

ஐயப்பன் பாண்டிநாட்டின் தலைநகரமான மதுரைக்கு வந்து மன்னனைக் கண்டு ஞானோபதேசம் செய்து ஒரு குறிப்பிட்ட நாளில் சபரிக்கு வரும்படி அழைத்தார். பின்னர் ஈழ தேசத்திற்கு விஜயம் செய்தார்.

எரிமேலியில் வாபரைச் சந்தித்து அடுத்து வரும் மகரசங்கிராந்தியன்று சாஸ்தா பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும் நாற்றிசைகளிலிருந்து வரும் படைகளும் எரிமேலியில் சந்திக்க வேண்டும் என்றும் கூறித்திட்டங்களை விளக்கி வாபரை முன்பே மலைக்கு அனுப்பி படைகள் தங்குவதற்கு ஏற்பாடுகளை செய்வித்தார். பின்னர் பொன்னம்பல மேட்டில் தவம் செய்து வந்த பெற்றோர்களைக் கண்டு சாஸ்தா பிரதிஷ்டையை தன் தந்தையாகிய ஜயந்தன் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். ஐயந்தனும் அதனைப் பெரும் பேறாகக் கருதி ஏற்றுக் கொண்டார்.

ஐயப்பன் புலிப்பாலுக்குச் சென்ற போது கொண்டுச் சென்றதைப் போலப் படையினரும் பக்தர்களும் இருமுடிக்கட்டு ஏந்திச் சென்றனர். ஆன்மீக உணர்ச்சியால் பக்தர்களும் படையுடன் கிளம்பினர். மகரசாந்திக்கு 41 நாள் முன்பிருந்தே பூரண பிரம்மச்சரிய விரதம் ஏற்று பஜனைகள் செய்து புறப்பட்டனர். பயிற்சிப் பெற்ற பெரியோர்கள் குருமார்களாகப் பணியேற்றனர். சரணம் விளித்து படை கிளம்பிற்று. அம்பலப்புழை பக்தர்கள் கருட தரிசனம் பார்த்துக் கிளம்பினர். இன்றும் வேட்டையாடும் போது அம்பலப்புழை பக்தர்களுக்கு கருட தரிசனம் தவறாமல் கிடைக்கின்றது. அம்பலப்புழை, ஆலங்காட்டுச் சங்கங்களிலிருந்து புறப்பட்ட படையினரின் ஆர்வத்தை ஐயப்பன் பாராட்டினார். இந்த இடங்களிலிருந்து வரும் பக்தர்களுக்கு இன்றும் பம்பையில் விருந்தும் சன்னதியில் "விரி" (விடுதி) உரிமைகளும் தரப்படுவதே இதற்குச் சான்று.

பல மலைகளையும், வனங்களையும் கடந்து எல்லோரும் மகரசாந்திக்கு 10 நாட்கள் முன்னரே எரிமேலி வந்தடைந்தனர். பேட்டை துள்ளல் எனும் விழா நடத்தினர். முதலில் எரிமேலிக் கடைவீதிக்கு சென்றனர். ஐயப்பன் ஆணைப்படி ஆயுதங்கள், காய்கறிகள் வாங்கினர். பெரிய ஆர்ப்பாட்டத்துடன் ஒரு கம்பளியில் கட்டித் தூக்கிச் சென்றனர். அரசனும் ஆண்டியும் வேற்றுமையில்லாமல் கருப்பு வேட்டி இடுப்பில் கட்டி, தலையில் கம்பளிச் சுற்றி கரி குங்குமங்களைப் உடம்பில் பூசி காட்டு இனத்தார் போல வேஷமிட்டு "ஐயப்பன் திந்தகத்தோம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி திந்தகத்தோம்" எனக் கோஷம் போட்டு வாத்தியங்கள் முழங்க வாபர் வணங்கும் இஸ்லாம் மத ஆலயத்தை வலம் வந்து பின் சாஸ்த்தாக் கோயிலை வலம் வந்து ஆனந்தக் கூத்தாடினர். பின்னர் சபரி மலை நோக்கிப் புறப்பட்டனர். எரிமேலியைத் தாண்டியதும் பெரியக் காடு தொடர்ந்தது. இதனை சாஸ்தாவின் நந்தவனம் என ஐயப்பன் போதித்தார். இலைக் கிள்ளிப் போட்டு வனதேவதையையும், கானகத்தையும் வணங்குமாறும், வனவிலங்குகளைத் துன்புறுத்தக்கூடாது என்றும் போதித்தார். எரிமேலிக்கு 2 மைல் கிழக்கேயுள்ள சாந்தியும் சுகமும் தருகின்ற பேரூர்தோட்டில் ஓய்வு எடுத்தனர்.

சபரி மலைக்கும் எரிமேலிக்கும் இடையில் பல மலைகளின் உச்சியில் உதயன் தாவனங்கள் (இருப்பிடம்) நிறுவியிருந்தான். முதலில் இஞ்சிப்பாறைக் கோட்டையை கைப்பற்ற அதனைக் காத்துவந்த புதுச்சேரி முண்டன் எனும் கொள்ளைக்கார தலைவனுடன் போரிட முடிவு செய்தனர். கோட்டையைச் சுற்றியிருந்த அகழியைத் தாண்டி செங்குத்தான அழுதை மலை உச்சியில் அமைந்திருந்த கோட்டையினைத் தாக்கும் முறையினை ஐயப்பன் காளைக்கட்டி என்னும் இடத்தில் படையினருக்கு கற்பித்தார். தன்பயணத்திற்கு வைத்திருந்த காளையைக் கட்டியதால் இவ்விடம் "காளைகட்டி" என அழைக்கப் பெறுகிறது. இங்கு ஐயப்பன் ஓய்வு எடுப்பதற்காக அமர்ந்தக் கல்லை இன்றும் தொட்டு வழிபட்டு வருகின்றனர்.

காளைகட்டியிலிருந்து கிழக்கே ஒன்றரை மைலில் அழுதையாறு ஓடுகிறது. இது பம்பையில் சேரும் சிற்றாறு இதன் கரையில் படைகள் தங்கி தாளமேளம் போட்டு பஜனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து இரவு தங்கினர். இஞ்சிப்பாறையில் போர் நடக்கும் போது உதயனின் தலைப்பாறைப் படைகள் உதவிக்கு வந்து விடாமலிருக்க ஓரே சமயத்தில் தலைப்பாறைக் கோட்டையையும் முறியடிக்க ஐயப்பன் திட்டமிட்டார். பந்தளம் படையைச் சேர்ந்த சின்னக்கடுத்தை (கொச்சுக் கடுத்தை) ராமன், கிருஷ்ணண் ஆகியோர் பொறுப்பில் ஒரு படையினை தலைப்பாறையைக் காக்க அனுப்பி விட்டு வாபர் தலைமையில் இஞ்சிப்பாறையைத் தாக்க ஆணையிட்டார் ஐயப்பன். ஐயப்பன் ஆணைப்படி அகழியைத் தாண்ட வீரர்கள் அழுதையாற்றில் குளித்து விட்டு பொருட்களையும் மரக்கிளைகளையும் அகழியில் போட்டனர். பாலம் போல் அமைத்து படையினர் சரணம் விளி போட்டு கொண்டு கோட்டைக்குள் புகுந்தனர். பல வித்தைகள் காட்டியும் பயனில்லாமல் புதுச்சேரி முண்டன் கோட்டை வாசலைத் திறந்து ஓட்டம் பிடித்தான். அவன் தப்பி ஓடி கரிமலைக் கோட்டை சென்று உதயனுக்கு உதவிபுரிய விடக்கூடாது என ஐயப்பன் ஆணையிட்டிருந்தப்படியால் வாபர் முண்டனைத் தொடர்ந்து சென்று கடும் போர் புரிந்தார். இறுதியில் கடும் போருக்குப் பின் வாபர் முண்டனை வெட்டி வீழ்த்தினார். இதனால் அந்த இடத்தில் ஓடுகின்ற நதிக்கு புதுச்சேரி ஆறு எனப் பெயர் வழங்கி வருகிறது. பின்னர் படை தொடர்ந்து கரியிலந்தோடு அடைந்து இரவு தங்கியது.

அதே நேரத்தில் தலைப்பாறைக் கோட்டையின் மேலிருந்து பந்தள வீரர்களைத் தாக்கும் எதிரிகளை வில்லாளி வீரனாகிய இராமன் அம்பு மாரி பொழிந்து அழித்தான். எதிர்க்க இயலாத கொள்ளைக்காரர்கள் தப்பியோடினர். இராமனுக்கு 'தலைப்பாறை வில்லன்" என்றும் கிருஷ்ணனுக்கு "தலைப்பாறை மல்லன்" என்றும் பெயர்கள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நடந்த இரு இடங்களிலும் ஓரே சமயத்தில் ஐயப்பன் காட்சியளித்து உபதேசம் கூறி உற்சாகம் ஊட்டியதாகக் கூறப்படுகிறது. சில சமயம் குதிரை மீதும் சில சமயம் யானை மீதும் பல இடங்களில் பல விதங்களில் ஐயப்பனைப் பாரத்ததாக வீரர்கள் கூறினர். பார்த்தசாரதியைப் போல ஐயப்பன் போர் நடத்தினாரே தவிர போர் புரிந்தார் இல்லை.

பொழுது விடிந்ததும் படைகள் கரிமலையைச் சுற்றி வளைத்தன. உதயன் திகைத்தான். எனினும் தளராமல் போர் புரிந்தான். "சரணம் ஐயப்பா, சரணம் ஐயப்பா" என்று குரல் எழுப்பிக் கொண்டு கரிமலைக் கோட்டையைப் படைகள் தாக்கின. ஐயப்பன் ஆணைப்படி கோட்டைக்கு வெளியில் நின்ற மரங்களை வெட்டி கோட்டையின் மீது சாய்த்தனர். மரங்கள் மீது ஏறி கோட்டை வாயிலைத் திறந்து படை நுழைந்தது. சின்னக்கடுத்தை உதயனை எதிர்த்து போரிட்டு வாளால் வெட்டி வீழ்த்தினார். மாலை பொழுதிற்கு முன் மலை உச்சியில் ஐயப்பன் கொடி பறந்நது. அமைதி நிலவியது.

மாலை வேளையில் கரிமலை இறங்கி பம்பாநதிக் கரை வந்தனர். இரவில் ஓய்வுக்கு முன் ஐயப்பன் எல்லோருக்கும் நன்றி செலுத்தினார். வெற்றிச் செருக்குறாமல் இருக்கும் படியும் வேண்டினார்.

ராமபிரான் பாததூளி என்ற புண்ணியம் பெற்ற புனித நதி பம்பை. இதன் கரையில் இருந்த மாதங்க முனிவருக்கும் அவர் சீடர்களுக்கும் தொண்டாற்றி இறுதியில் இராமபிரானின் அருள் பெற்று சபரியில் முக்தியடைந்த வேடுவப் பெண்ணான "சபரி" வாழ்ந்ததும் இந் நதிக் கரையில்தான். மறுநாள் காலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பையில் நீராடி பித்ருக்களுக்கு சிரார்த்தம் ஊட்டியபின் உணவருந்தினர். மதியச் சாப்பாடு சிறந்த விருந்தாக அமைந்தது. சிலர் விறகு பொறுக்கிவரச் சென்றனர். சிலர் உணவு தயாரிக்க முற்பட்டனர். சிலர் தீபக்காட்சி ஏற்பாடு செய்தனர். ரதம் போல சப்பரங்கள் செய்து அதனுள் தீபம் ஏற்றினர். ஐயப்பன் எல்லோருடனும் எல்லா வேளைகளிலும் கலந்துகொண்டார். அப்பளமும், பழங்களும் கட்டி உயரமான மரக்கிளைகளில் தொங்கவிட்டு வனதேவதைகளுக்கு நெய்வேத்தியம் படைக்கச் செய்தார். பெரும் விருந்து மிகச் சிறப்பாக நடந்தது. வனதேவதைகளும், சித்தர்களும் மாறு வேடம் பூண்டு வருவர் என ஏழைகளுக்கும் இரப்போர்க்கும் உணவளிக்கச் செய்தார். இது போல் இன்றும் பக்தர்கள் 'சக்தி பூஜை" எனக் கொண்டாடி வருகின்றனர். மாலையில் தீபம் ஏற்றி பஜனை நடத்தினர். பம்பையின் மணல் திட்டில் நெருப்பு மூட்டி வலம் வந்தனர். பம்பையின் தீப ஒளி அழகு இன்றும் கண்கொள்ளாக் காட்சியாக சிந்தை கவருகிறது.

இரவு பம்பையில் தங்கினர். மறுநாள் காலை சபரி நோக்கிப் புறப்பட்டனர். நீலி மலை ஏற்றம் தொடங்கியது. புஷ்ப அரச்சனை செய்து மலையை வழிபட்டு மலையேறினர். இன்றும் பச்சிலை கிள்ளிப் போட்டு நீலிமலை ஏறுவது வழக்கமாக இருந்து வருகிறது. நீலி மலை ஏற்றம் மற்ற மலைகளைவிட கடினமாக இருந்தது. என்றாலும் தர்மசாஸ்தாவின் அருள் சன்னதி நெருங்கிவிட்டதால் பரவசமிகுந்து ஆர்வத்துடன் தொடர்ந்தனர்.

வழியில் இராம பக்தையான "சபரி" முக்தி பெற்ற சபரி பீடத்தை ஐயப்பன் ஆணைபடி வழிபட்டு இராமகதையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தில் கொண்டு சென்றனர். ஐயப்பனின் படைகளுக்கு இனி ஆயுதங்கள் தேவையில்லாததால் அவற்றை ஆலமரத்தடியில் போடும்படி ஐயப்பன் ஆணையிடவே அவ்வாறு செய்தனர். அதுதான் இன்றும் அந்த இடம் "சரங்குத்தி ஆல்" என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆலமரத்தின் அடியில் ஐயப்பன் சில உபதேசங்கள் அருளினார். அவர் உபதேச மொழிகளாவன.

பற்றற்ற கருமம் செய்வோமானால் மனம் மாசு பெறாது. தூய மனதில் ஞானம் ஒளிரும். ஞானம் வாழ்வின் இலட்சியம். நற் கருமத்திற்கு இடையூராவது காமம், வெகுளி, பேராசை முதலியன. இவற்றை அழிக்கக் கடவுள் தியானம் அவசியம். தியானத்தில் மனம் நிலை பெறும் போது சாந்தியும், பேரின்பமும் உண்டாகும். கடவுளிடம் சரணாகதி அடைதலே பக்தியின் இறுதிமொழி. "சரணம் ஐயப்பா" என்ற சரணாகதி மந்திரத்தை தூய மனத்துடன் ஓதுகிறவன் முக்தி பெறுவான். பதினெட்டுப்படி ஏறி தர்மசாஸ்தாவின் சன்னதி எட்டியதும் கடவுள் தரிசனம் கிடைக்கிறது. இந்த பதினெட்டுப் படிகளும் பதினெட்டுத் தத்துவங்களாகும். அவையாவன - புலன் ஐந்து, பொறி ஐந்து, பிராணன் ஐந்து, மனது, புத்தி, ஆங்காரம் இவைகளைக் கடந்தவனே கடவுளைக் காண இயலும்.

பாண்டிய மன்னரும் சாஸ்தா பிரதிஷ்டைக் காண ஏற்கனவே அடைக்கப் பெற்றதால் அவரும் படைகளுடன் வருகை தந்திருந்தார். பிரதிஷ்ட்டை ஐயப்பனின் தகப்பனார் செய்து வைக்க ஏற்பாடாகியிருந்தது.

பொழுது புலர்ந்ததும் "உரல்குழி" தீர்த்தமாடி பக்தர்கள் தேங்காய் உடைத்து "சரணம் ஐயப்பா" என்று கூவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே பதினெட்டுப் படிகளும் ஏறிக் கடந்தனர். எல்லோரும் உச்சிப் படி எட்டியதும் பெற்றோரின் திருவடிகளில் ஐயப்பன் வீழ்ந்து வணங்கினார். பாண்டிய மன்னனுக்கும் தந்தையாக இருந்த பந்தள மன்னனுக்கும் நமஸ்காரம் செய்தார். பாண்டிய மன்னன் தன் குல தேவதையான ஸ்ரீமதுரை மீனாட்சியம்மனையும் பிரதிஷ்ட்டை செய்யும் படி ஐயப்பனை வேண்டினார். அதன் படி சாஸ்தா கோயிலுக்கு வடதிசையில் ஒரு கல் மேடு கட்டும்படியும் அதன் மேல் மண்டபம் கட்டி ஸ்ரீமீனாட்சியம்மனைத் தானே பிரதிஷட்டை செய்யப் போவதாகவும், அது வருங் காலத்தில் "மாளிகைப்புறம்" என்னும் பெயரில் அழைக்கப்படும் என்றும் பதில் விடுத்தார்.

முகூர்த்தம் நெருங்க நெருங்க பக்தர்கள் திரள் திரளாக கோயிலை நெருங்கினர். மிகுந்த அமைதி நிலவியது. ஒவ்வொரு கணமும் ஐயப்பனின் பொலிவு பெருகி ஐயப்பனைச் சுற்றி ஒளி வட்டம் அதிக பிரகாசமாயிற்று. எங்கிருந்தோ திடீரென ஒற்றைக் கருடன் "கிருஷ்ணா" எனக் கத்திக் கொண்டு வட்டமிட்டுப் பறந்தது. பிறகு மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மனை பிரதிஸ்டை செய்து அம்மனின் அருள் என்றென்றும் இங்கு நிலைத்திருக்கும் என்றும், இந்தக் கோயிலுக்கும் சாஸ்தாக் கோயிலைப் போலவே பெருமை உண்டு என்றும் கூறினார். பிறகு எல்லோருக்கும் அருள்காட்டிப் பின்வரும் அறிவுறைகளை வழங்கினார்.

இனிமேல் சபரிமலை மிகச் சீரும் சிறப்புமாக விளங்கும். இன்னும் ஏராளமான பக்தர்கள் ஆண்டு தோரும் தவறாமல் சபரி யாத்திரை வருவார்கள். நாம் கைக்கொண்ட முறைகளைப் பின்பற்றி ஒருமண்டலம் (41 நாட்கள்) விரமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டு எரிமேலி, காளைக்கட்டி, இஞ்சிப்பாறைக்கோட்டை, கரிமலை, சபரிபீடம், சரங்குத்தி ஆல் சுவடு, பதினெட்டாம் படி இவைகளைக் கடந்து முக்கியமான இடங்களில் நாம் செய்த சடங்குகளை தவறாமல் செய்து சாஸ்தாவின் அருள் பெறுவார்கள். பம்பா தீர்த்தமாடி பித்ருதர்ப்பணம், குருதட்சிணை, தீபக்காட்சி, நதி பூஜை முதலியன செய்து புண்ணியம் பெறுவர்.

சங்கநாதமும் வாத்தியங்களும் முழங்க சாஸ்தா வின் விக்கிரகத்தை திருக்கோயிலுக்குள் எடுத்துச்சென்று ஐயப்பனின் தந்தையான ஜயந்தன் பீடத்தின் மேல் ஏற்றிவைத்தார். உடனே திடீரென ஒரு மின்னல் ஒளி பளிச்சிட்டது. ஐயப்பன் நின்ற இடத்திலிருந்து ஒரு திவ்ய பிரபை கிளம்பி விக்கிரகத்தில் அடங்கிவிட்டதை மக்கள் உணர்ந்தனர். ஐயப்பன் மாயமாய் மறைந்துவிட்டார். சாஸ்தா விக்கிரகத்தில் ஐயப்பன் ஐக்கியமாகி விட்டார். எல்லோரும் தம்மை மறந்து "சரணம் ஐயப்பா, சரணம் ஐயப்பா" எனக் கூவிக் கைகூப்பித் தொழுதனர். சாஸ்தாக் கோவிலை வலம் வந்தனர். படைவீரர்களும் பக்திப் பெருக்கால் கண்ணீர் சிந்தி ாரவசமடைந்தனர். சற்று நேரத்தில் சாரிமலை முழுவதும் சாந்தி நிலவியது.

ஐயப்பன் பெற்றோர் பொன்னபல மேட்டுக்குத் திரும்பி மீண்டும் தவமேற்றனர். பாண்டி மன்னருக்குப் பந்தள மன்னர் விடை கொடுத்தார். சபரி கோயிலின் நிர்வாகத்தை பந்தள மன்னர் ஏற்றார். கோயிலின் பாதுகாப்புக்கு வாபர், சின்னக்கடுத்தை, இராமன், கிருஷ்ணன் ஆகியோர் நியமிக்கப் பெற்றனர். ஓர் உத்தம பிராமணரைக் கொண்டு பூஜைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்திப் பின் கோயிலைப் பூட்டிச் சாவியை பெற்றுக் கொண்டு பந்தள மன்னர் நாடு திரும்பினார். மக்களும் உள்ள நிறைவோடு ஊர் திரும்பினர்.

இத்தகு சிறப்பு மிக்க ஐயப்பன் வரலாற்றினை அறிந்து உண்மை உணர்ந்து ஐயப்பன் புகழ் பாடும் பக்தர்களும், அன்பர்களும் ஐயப்பனின் பேரருளைப் பெற்று நல்வாழ்வு பெறுவார்களாக.

சுவாமியே சரணம் ஐயப்பா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தர்கள் பின்பற்ற வேண்டிய பயண விதிமுறைகளும் குறிப்புகளும்

இப்பூவுலகிலே பக்தி உணர்ச்சி தழைத்தோங்கி நிற்கும் புனிதப்பூமியாகிய நம் பாரத பெருநாட்டில் தூய உள்ளத்துடன் உலக மாயை அகற்றி, உள்ளம் தெளிவாக்கி பற்றற்ற பரந்த மனப்பான்மையோடு பக்தர் வெள்ளம் பயபக்தியுடனும், பரவசத்துடனும் பயணம் தொடர்கின்ற புனித யாத்திரை சபரி யாத்திரை என்பதை நாடறியும். பல்லாண்டுகளாக பெரியோர் பலரால் போற்றி காப்பாற்றப்பட்டு வரும் பயண விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் இக்காலத்தில் சபரி யாத்திரை செல்லும் இளம் தலைமுறையினர் உறுதியுடனும் உள்ளத்தெளிவோடும் ஒழுங்குடன் பின்பற்றி சபரி யாத்திரையின் புனிதத் தன்மையை மாசின்றி நிலை நிறுத்த வேண்டியது கடமையாகும்.

பயண விதிமுறைகள் பற்றி இனிக் காண்போம்.

01. ஐயப்ப பக்தர்கள் இயன்றவரை கார்த்திகைத் திங்கள் முதல் நாள் மாலை அணிந்து கொள்வது சாலச்சிறந்தது. அன்று நாள், கிழமை பார்க்கவேண்டியதில்லை. அதற்குப் பின் மாலை அணிபவர்கள் கார்த்திகை 19 தேதிக்குள் ஏதாவதொரு நல்ல நாளில் மாலை அணியலாம். எப்படியும் சன்னிதானத்திற்குச் செல்லும் தினத்திற்கு முன்னதாக குறைந்தது ஒரு மண்டலம் (41 நாட்கள்) விரதம் இருக்கும்படி பார்த்து அதற்குள் மாலை அணிந்துக் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. துளசிமணி அல்லது உருத்திராட்சமாலை 108 அல்லது 54 மணிகள் உள்ளதாகப் பார்த்து வாங்கி அத்துடன் ஐயப்பன் திருவுருவப்பதக்கம் ஒன்றையும் இணைத்து அணிய வேண்டும். அத்துடன் துணை மாலை ஒன்றும் அணிந்துக் கொள்வது நல்லது.

03. பல முறை விரதம் இருந்து சபரிமலை சென்று வந்து பக்குவமடைந்த பழமலை ஐயப்பன்மார் ஒருவரைக் குருவாக ஏற்று திருவிளக்கு முன்பாகவோ, திருக்கோயில்களிலோ குருநாதரை வணங்கி அவர் திருக்கரங்களால் மாலை அணிந்துக் கொள்ள வேண்டும். அல்லது தாய் தந்தையர் மூலமாகவோ, இறைவன் திருவடிகளில் வைத்து எடுக்கப் பெற்ற மாலையினையோ அணிந்துக் கொள்ளலாம். மாலை அணிந்துக் கொண்டவுடன் குருநாதருக்கு தங்களால் இயன்றளவு குருதட்சினையைக் கொடுத்து அடிவணங்கி ஆசிப்பெற வேண்டும். ஐயப்பனாக மாலைத் தரித்த நிமிடத்திலிருந்து குருசுவாமியை முழுமனத்துடன் ஏற்று அவர் தம் மொழிகளை வேதவாக்காக மதித்து மனக் கட்டுபாட்டுடன் பணிந்து நடந்துக்கொண்டு பயணத்தை இனிதாக்க ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

04. நீலம், கருப்பு, காவி, பச்சை, மஞ்சள் இவற்றுள் ஏதாவது ஒரு நிறத்தில் உடைகள் அணிய வேண்டும். தங்கள் கடமைகளை ஆற்றுகின்ற சமயங்களில் இயலாவிட்டாலும் பஜனைகளில் கலந்துக் கொள்ளும் போதும், யாத்திரையின் போது முழுவதும் கண்டிப்பாக வர்ண உடை அணிய வேண்டியது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மலைக்குச் செல்லக் கருதி மாலை அணிய விரும்பும் பக்தரை தாய், தந்தை, மனைவி, மக்கள் முதலியோர் தடுத்தல் கூடாது. எவ்வித அச்சமும் இல்லாமல் தர்மசாஸ்தாவிடம் முழுப்பொறுப்பையும் வைத்து முக மலர்ச்சியுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

06. மேற்கொள்ள வேண்டிய விரதங்களில் மிகவும் ஒழுங் குடன் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியது பிரம்மச் சாரிய விரதமாகும். மனம், வாக்கு, செயல் என்ற மூவகைகளிலும் காம இச்சையை அறவே நீக்க வேண்டும்.

07. காலை, மாலை இருவேளைகளிலும் குளிர்ந்த நீரில் தவறாமல் நீராடி ஐயப்பன் திருவுருவப்படத்தை வைத்து வணங்குதல் வேண்டும். தினமும் ஆலய வழிபாடும் பஜனைகளில் கலந்துக் கொண்டு வாய்விட்டுக் கூவி சரணம் விளித்து ஐயப்பன் புகழ் பாடி மகிழ்தலும் பேரின்பம் பயக்கும்.

08. படுக்கை தலையணைகளை நீக்கி தன் சிறு துண்டை மட்டும் தரையில் விரித்து துயில வேண்டும். பகல் நேரத்தில் தூங்குவதை தவிர்க்க வேண்டும்.

09. களவு, சூதாடுதல், பொய், திரைப்படங்கள், விளையாட்டு, வேடிக்கைகள், உல்லாசப்பயணங்கள், போதையூட்டும் பொருட்கள், புகைப்பிடித்தல் முதலியவற்றை தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, சவரம் செய்துக் கொள்வது, காலணிகள், குடை உபயோகிப்பது முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

11. மற்றவர்களிடம் பேசும் பொழுது "சாமி சரணம்" எனத் தொடங்கி பின் விடை பெறும் பொழுது "சாமி சரணம்" எனச் சொல்ல வேண்டும்.

12. விரத காலத்தில் அசைவ உணவு அருந்துவது மாபெரும் தவறாகும். எனவே வீட்டிலேயே தூய்மையாக தயாரித்த சைவ உணவே உண்ண வேண்டும். மாலை தரித்த ஐயப்பன்மார் வீட்டைத் தவிர மற்றவர்கள் வீட்டில் எக்காரணத்தினாலும் உணவு அருந்தக் கூடாது.

13. பக்தர்கள் மாலை தரித்த பிறகு சந்திக்கின்ற ஆண்களை ஐயப்பா என்றும் பெண்களை மாளிகைப்புறம் என்றும் சிறுவர்களை மணிகண்டன், சிறுமிகளை கொச்சி என்றும் குறிப்பிட்டு அழைக்க வேண்டும்.

14. சபரி மலை செல்லும் பக்தர்கள் புதிதாக பயணம் வர விரும்புகிறவரிகளிடம் "நான் பத்திரமாக கூட்டிக்கொண்டு போய் வருகிறேன் என்னோடு தைரியமாக வரலாம்" என்றுச் சொல்லக்கூடாது. பயணம் புறப்படும் பொழுது "போய் வருகிறேன்" என்று யாரிடமும் சொல்லி கொள்ளக்கூடாது. எல்லாப் பொறுப்பினையும் ஐயப்பனிடம் ஒப்படைத்து அவன் திருவடிகளே சரணம் என்ற பக்தியுணர்வுடன் சரணம் விளித்துப் புறப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மாலையணிந்த ஐயப்பன்மார்கள் தங்களது கடமைக்கு இடையூறு இல்லாமல் சுறுசுறுப்புடன் தங்களது பயணி களைச் செவ்வனேச் செய்ய வேண்டும்.

16. மாலையணிந்த நாள் முதல் பக்தர்கள் நாள்தோறும் 108 சரணங்கள் சொல்லி காலை, மாலை வழிபட்டு துளசி, கற்கண்டு, நாட்டுச்சக்கரை, பால் இவற்றுள் ஏதாவதொன்று சிறிதளவு வைத்து நெய்வேத்தியம் செய்து வணங்க வேண்டும்.

17. யாத்திரை புறப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாக கன்னிப் பூஜை நடத்த வேண்டும். எல்லா ஐயப்ப பக்தர்களும் தங்கள் வீட்டிலோ அல்லது குருசுவாமி மற்றும் ஐயப்பன் பக்தர்கள் வீட்டிலோ, பொது இடங்களிலோ சற்று விரிவான முறையில் கூட்டு வழிபாடு (பஜனை) நடத்தி எல்லோருக்கும் பிரசாதம் வழங்கி அருள் பெறுவது சாலச்சிறந்தது. ஐயப்பமார் ஒருவருக்காவது அன்னமிடுதல் மிக்க அருள் பாலிக்கும்.

18. மரணம் போன்ற துக்க காரியங்கள் எதிலும் ஐயப்ப மார்களும் அவர்கள் குடும்பத்தினரும் கலந்துக் கொள்ள கூடாது. தவிர்க்க முடியாத நெருங்கிய உறவில் மரணம் நேரிட்டுக் கலந்துக் கொள்ள நேரிட்டால் தான் அணிந்த மாலையைக் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிய பிறகு தான் கலந்துக்கொள்ள வேண்டும். மாலையைக் கழற்ற நேர்ந்தால் மீண்டும் உடனே அணிந்துக் கொண்டு யாத்திரை செல்ல முற்படக்கூடாது. ஐயப்பன் திருவருளை வேண்டி மறுவருடம் சென்று வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. எல்லா விரதங்களிலும் பிரம்மச்சாரிய விரதம் முக்கிய மானதாகும் எனவே எந்தப் பெண்களைக் கண்டாலும் தாயென்றேக் கருதவேண்டும். மாதவிலக்கான பெண்களைக் காணக்கூடாது. தவறுதலாகக் காணநேர்ந்தால். உடனே நீராடி ஐயப்பனை வழிபட வேண்டும். பெண்கள் ருதுமங்கள சடங்கு விழாவிற்கோ, குழந்தை பிறந்த வீட்டிற்கோ சென்றுக் கலந்துக் கொள்ளக்கூடாது.

20. இருமுடிகட்டு பூஜையை தன் வீட்டிலே இயன்ற தட்சிணைக் கொடுத்து குருவின் கரங்களால் இருமுடியை தலையில் ஏற்று வீதிக்கு வந்ததும் வாசற்படியில் விடலைத் தேங்காய் உடைத்து ஐயப்பன் சரணக் கோஷத்துடன் பின்னால் திரும்பிப் பார்க்காமல் ஓரே நோக்கத்துடன் பயணம் தொடர வேண்டும். யாரிடமும் போய் வருகிறேன் என்று சொல்லக்கூடாது.

21. கன்னி ஐயப்பமார்கள் யாத்திரை புறப்பட்ட நேரத்திலிருந்து ஐயப்பன் சன்னிதானம் செல்லும் வரை அவர்களாக இருமுடியை தலையிலிருந்து இறக்கி வைக்கவோ ஏற்றிக் கொள்ளவோ கூடாது. குருநாதர் அல்லது பழமலை ஐயப்பன்மாரைக் கொண்டு ஏற்றவோ, இறக்கவோ வேண்டும்.

22. 12 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுமிகளும் ருதுகாலம் நின்ற வயதானப் பெண்களும் மட்டுமே சபரி யாத்திரையில் கலந்துக் கொள்ளலாம்.

23. யாத்திரை வழியில் அடர்ந்த வனங்களில் காட்டு யானை, புலி, கரடி முதலான விலங்குகள் இருக்குமாதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் கூட்டமாக சரணம் விளித்துக் கொண்டே செல்ல வேண்டும். இரவு வேளைகளில் காட்டிற்குள் மலஜலத்திற்காக தனியே அதிகத் தூரம் செல்லக் கூடாது. சரணம் ஒலித்தல் சங்கு ஒலித்தல் வெடி வைத்தல் பாதுகாப்புக்கு சிறந்த வழிகளாகும்.

24. பம்பை நதியில் நீராடும் பொழுது மறைந்த நம் முன் னோர்களுக்கு ஈமக் கடமைகள் செய்து முன்னோர்களின் ஆத்மா சாந்திபெற வழிவகுக்க வேண்டும்.

25. பம்பையில் சக்தி பூஜையின் போது ஐயப்பமார்கள் சமைக்கும் அடுப்பிலிருந்து சிறிதளவு சாம்பல் சேகரித்து சன்னதி ஆழியில் இருந்து எடுக்கப் பெற்ற சாம்பலை அத்துடன் கலந்து தயாரிக்கப் பெறுவதுதான் சபரிமலைப் பஸ்பம். இது மிகவும் சக்திவாய்ந்ததாகும்.

26. இருமுடியில் ஐயப்பனுக்காக கொண்டுச் செல்லும் நெய்த் தேங்காயை சன்னிதானத்தில் உடைத்து அபிஷேகம் செய்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் இந்த நெய்யையும் விபூதி பிரசாதங்களையும் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

27. ஐயப்பனுக்கு காணிக்கையாக சுற்றத்தார்களும் மற்றவர்களும் கொடுத்தனுப்பும் காணிக்கையை சன்னித் தானத்தில் செலுத்தி அவர்களுக்கு ஐயப்பன் திருவருள் கிடைக்க வேண்டிக் கொள்ள வேண்டும்.

28. குருசுவாமிக்கு தட்சணை கொடுக்க வேண்டிய சமயங்களி லெல்லாம் ஐயப்பமார்கள் தாங்கள் விரும்பியதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் வசதிக்கேற்றவாறு கொடுத்து குருவின் அருளைப் பெறலாம். இதில் எந்தவித நிபந்தனையும் கிடையாது. ஐயப்பமார்கள் கொடுக்கும் காணிக்கை எவ்வளவாக இருந்தாலும் அதை மன மகிழ்வுடன் பெரும்பொருளாக ஏற்று குருவின் குருவான ஐயப்பனுக்கே செலுத்தி பேரருள் பெற்றுய்வது குருமார்களுக்குச் சாலச்சிறந்ததாகும்.

29. ஐயப்பன்மார்கள் எல்லோரும் குறிப்பாக கன்னி ஐயப்ப மார்கள் பெரிய பாதையில் (அழுதை வழி) சென்று வருவது மிகுந்தப் பயன் விளைவிக்கும். ஆனால் சிலர் தங்கள் தொழில், கடமை சூழ்நிலை கருதி எரிமேலியிலிருந்து சாலைக்காயம் வழியாகவும், சிலர் வண்டிப் பெரியாறு வழியாகவும் சபரிமலை செல்கின்றார்கள். என்றாலும் மேற்குறிப்பிட்ட பெரிய பாதையில் செல்லும் பொழுது மலைகளில் விளையும் பல மூலிகைகளின் சக்தி கலந்த காற்றினை பெறுவதாலும் பல மூலிகைகள் கலந்த ஆற்று நீரில் குளிப்பதால் உடல் நலம் ஏற்படுவதாலும் எழில் மிக்க காட்சிகளைக் கண்டு களிப்பதால் உள்ளம் பூரிப்பதாலும் பேரின்பமும் பெருநலமும் அடைகிறோம். நீண்ட வழிப் பயணத்தில் ஐயப்பன் சரணமொழி அதிகம் விளிப்பதால் பகவானின் திருநாம உச்சரிப்பு மிகுந்து பக்தி உணர்ச்சி வளர்கிறது.

30. யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் திருவருள் பிரசாதக் கட்டினை தலையில் ஏந்தியப்படி வாயிற்படியில் விடலைத் தேங்காய் அடித்து வீட்டிற்குள் நுழையவேண்டும். வழிபாட்ட அறையில் கற்பூர ஆரத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு கட்டினை அவிழ்த்து பூஜை செய்து பிரசாதத்தினை வழங்க வேண்டும்.

31. யாத்திரை இனிது நிறைவேறியதும் குருநாதர் மூலம் மாலையைக் கழற்றி ஐயப்பன் திருவுருவப்படத்திற்கு அணிந்துவிட்டு விரதம் பூர்த்தி செய்துக் கொள்ள வேண்டும். ஐயப்பன் திருவருளால் எல்லா நலன்களும் வாய்க்கப்பெற்று பல்லாண்டு இனிது வாழ பகவான் நாமம் பாடித் துதிப்போமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் போற்றி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றுந்தா.

## விநாயகர் வழிபாடு

ஓம் மூலப் பொருளே முதல்வா போற்றி
ஓம் மூவுலகும் தொழும் தேவா போற்றி
ஓம் காலம் கணக்கு கடந்தாய் போற்றி
ஓம் காதற் பொருளை அருள்வாய் போற்றி
ஓம் ஓலமிட்டழைத்தோம் வருவாய் போற்றி
ஓம் எனும் ஒலியில் ஒளிர்வாய் ோபற்றி
ஓம் ஞாலம் முழுவதும் காப்பாய் போற்றி
ஓம் நாளும் தொழுவோம் போற்றி போற்றி

## வெள்ளிக் கொம்பன் விநாயகனே

வெள்ளிக் கொம்பன் விநாயகனே!
வினைகள் தீர்க்கும் ஐங்கரனே
அன்னை பராசக்தி அருந்தவ புதல்வா
ஆனைமுகனே விநாயகனே! - வெள்ளி

அகமும் புறமும் இருப்பவனே
அடியார்கள் துயர் துடைப்பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றோரத்திலும் குளக்கரை தன்னிலும்
அமர்ந்தா சாட்சி புரிபவனே! - வெள்ளி

ஓங்காரப் பொருளின் தத்துவமே
உள்ளத்தில் குடி கொண்டவனே!
உன் புகழ் பாடும் பக்தர்கள் குறையை
உடனடியாக தீர்ப்பவனே - வெள்ளி

பக்தர்கள் நாங்கள் ஒன்று கூடி
பாதம் மலர்களை பணிகின்றோம்
இங்கெழுந்தருள வேண்டுமைய்யா
எங்கள் குறைகளை தீர்ப்பவனே - வெள்ளி

## பிள்ளையார் பெருமை

நம் பிள்ளையார் மிக நல்ல பிள்ளையார்
கன்னி பிள்ளையார் அவர் கற்பக பிள்ளையார்
வலம் வந்தால் வாழவைக்கும் வரத பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த பிள்ளையார்
ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்

ஆறுமுக வேலனின் அண்ணனான பிள்ளையார்
நேருந்துன்பம் யாவையும் தீர்த்து வைக்கும் பிள்ளையார்
மஞ்சளிலே செய்திடினும் மண்ணிலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார்

அவல்பொரி கடலையும் அரிசிமாவு கொழுக்கட்டையும்
கவலையின்றி தின்னுவார் கஷ்டங்களைப் போக்குவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகத்தின் விந்தைகள் காணவேண்டி அனுதினமும்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல் சுற்றுவார் பிள்ளையார்

## நம்ம கணபதியை பாரு!

அப்பளம் உழுந்து வடை பொங்கலைப் பாரு - நம்ம
கன்னிமூல கணபதிக்கு பூஜையைப் பாரு
கிழக்கு முகம் பார்த்திருக்கும் தொந்தியைப் பாரு - நம்ம
கீர்த்தியான கணபதிக்கு பூஜையைப் பாரு
மேற்கு முகம் பார்த்திருக்கும் தொந்தியைப் பாரு நம்ம
மேன்மையான கணபதிக்கு பூஜையைப் பாரு - அப்பளம்
வடக்கு முகம் பார்த்திருக்கும் தொந்தியைப் பாரு - நம்ம
வாழவைக்கும் தெய்வத்துக்குப் பூஜையைப் பாரு
அரச மரத்தை சுற்றி நாம அவரை வேண்டனும் அவர்
யாருக்காக காத்திருக்கிறார் தெரியலை பாரு - அப்பளம்

## கணேசா சரணம்

கணேசா சரணம் சரணம் கணேசா
சரணம் சரணம் சரணம் கணேசா
மூலமுதற் பொருளே சரணம் கணேசா
மூத்தவன் நீயே சரணம் கணேசா (கணேசா)

பார்வதி பாலா சரணம் கணேசா
மாலவன் மருகா சரணம் கணேசா
சக்தியின் மைந்தா சரணம் கணேசா
சகலமும் அருள்வாய் சரணம் கணேசா (கணேசா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை முகவா சரணம் கணேசா
நான் உன்னைப் பணிந்தேன் சரணம் கணேசா
கானில் வாழும் சரணம் கணேசா
ஞாலம் போற்றும் சரணம் கணேசா (கணேசா)

என் பிழை பொறுப்பாய் சரணம் கணேசா
ஈஸ்வரன் மைந்தா சரணம் கணேசா
உன்னருள் இன்றி சரணம் கணேசா
உலகம் மகிழுமோ சரணம் கணேசா
கனிதனைப் பெற்றிட சரணம் கணேசா
கனமதில் ஞாலமாய் சரணம் கணேசா
தந்தையைச் சுற்றியே சரணம் கணேசா
கனிதனைப் பெற்றவா சரணம் கணேசா
கன்னி மூலத்தவா சரணம் கணேசா
இனியெனைக் காத்திட வா சரணம் கணேசா
தடையென மூலவா சரணம் கணேசா (கணேசா)

## காவடியாம் காவடி

காவடியாம் காவடி கந்தவேலன் காவடி
கண்கொள்ளா காட்சி தரும் கடம்பனுக்கு காவடி
வேல் முருகன் நாமத்தில் விதவிதமாய் காவடி
வெற்றி வேலன் காவடி வீரவேலன் காவடி - காவடி

சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி
வண்ணமயில் தோகையோடு ஆடிவரும் காவடி - காவடி

பழனிமலை பாலனுக்கு பால் குடத்தால் காவடி
தென்பழனி வேலனுக்கு தேன் குடத்தால் காவடி
சுவாமி நாத வேலனுக்கு சந்தனத்தால் காவடி - காவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசுப்பிர மணியனுக்கு பஞ்சாமிர்த காவடி
ஆறுமுக வேலனுக்கு அழகு மயில் காவடி
வண்ண வண்ண காவடி வெற்றி வேலன் காவடி - காவடி

மயூரநாதனுக்கு மச்சத்தால் காவடி
குன்றக்குடி குமரனுக்கு குறைவில்லாத காவடி
பக்தரெல்லாம் கொண்டாடும் காவடியாம் காவடி - காவடி

பாமாலை பாடி ஆடி நாடிவரும் காவடி
கண்கொள்ளா காட்சி தரும் கந்த வேலன் காவடி
காவடியாம் காவடி காணவேண்டும் கண்கோடி - காவடி

## சிவன் பாடல் சங்கர சிவா

சங்கர சிவா சிவசங்கர சிவா
சம்போ மகாதேவா சாம்ப சிவா
எமன் மிக பொல்லாதவன் விடவே மாட்டான் - அவன்

சிவன் நாமம் சொல்வதென்றால் தொடவே மாட்டான்
எமன் பெரும் வல்லான் விட்டு செல்லவே மாட்டான் - அவன்

ஐயப்பன் பக்தன் என்றால் அனுகவே மாட்டான்
மாயை நம்மை தொடரும் போது மயங்க வேண்டாம் - அவன்

மணிகண்டன் பெயர் சொல்ல தயங்க வேண்டாம்
கவலை கொண்டு நித்தம் மனம் கலங்க வேண்டாம் - அந்த

காந்தமலை வாசன் பெயர் மறக்க வேண்டாம்
துன்பம் வந்து சூழ்ந்த போது துடிக்கவும் வேண்டாம் - அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயவன் நாமம் சொல்ல தளர வேண்டாம்
ஆபத்து வேளைதனில் அயர வேண்டாம் - அந்த
ஐயப்பன் பெயர் சொல்ல மறக்க வேண்டாம்

## ஸ்ரீ வெங்கடாசலபதி துதி

நந்தன நந்தன கோபாலா
நவநீத சோரா கோபாலா (நந்தன)

யசோதா பாலா கோபாலா
யதுகுல திலகா கோபாலா (நந்தன)

ஆபத் பாந்தவா கோபாலா
அனாத ரட்சக கோபாலா (நந்தன)

காளிங்க நர்த்தன கோபாலா
கம்ச மர்த்தன கோபாலா (நந்தன)

வேணு விலோலா கோபாலா
விஜய கோபாலா கோபாலா (நந்தன)

ராதா கிருஷ்ணா கோபாலா
ராஜ கெம்பீர கோபாலா (நந்தன)

வெண்ணெயுண்டவா கோபாலா
வெங்கடேசா கோபாலா (நந்தன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை ஆதிபராசக்தியம்மா

அன்னை உருவம்மா ஆதிபராசக்தியம்மா
ஐயப்பனை கண்டு வர அருள்வரம் தாருமம்மா
காசியிலே வீற்றிருக்கும் விசாலாட்சி தாயேயம்மா
காற்றாலை நாதனையே காணவரம் தாருமம்மா
காஞ்சியிலே வீற்றிருக்கும் காமாட்சி தாயே அம்மா
கண்கண்ட தெய்வத்தையே காணவரம் தாருமம்மா
மதுரையிலே வீற்றிருக்கும் மீனாட்சி தாயே அம்மா
மணிகண்ட தேவனையே காணவரம் தாருமம்மா
சோற்றணிக்கரை வாழும் பகவதி தாயே அம்மா
சண்முக சோதரனையே காணவரம் தாருமம்மா
கன்னியாக்குமரியிலே பகவதியே தாயேயம்மா
கலியுக வரதனையே காணவரம் தாருமம்மா

## சபரிமலை ஐயப்பன் போற்றித் திருப்பதிகம்

சரணமென வந்தவர்க்குத்
தனிக்கருணை நல்குகிற தலைவா போற்றி
கரணமெலாம் ஒடுங்கியவர்
கண்முன்னர் காட்சி தரும் கனிவேப் போற்றி
திரணமென வையமிதின்
தீங்குகளைத் துறந்தவர்தம் திருவே போற்றி
மரணமிலாப் பெருவாழ்வை
மயக்கமற நல்கிவளர் மலையே போற்றி (1)

காடுமலை நாடுநகர்
கடந்துநடந் தோடிவந்து கண்டோம் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடுவளர் கேடு குறை
ஒழிந்த மனம் மீதுவளர் ஒளியே ஐயா
பாடுபெறு பம்பை நதி
படிந்துவரும் பக்தர்களைப் பார்ப்பாய் ஐயா
தேடுபொருள் பெருநிதியம்
செழிக்கநலம் சிறந்தோங்கச் செய்வாய் ஐயா (2)

ஐயப்பா ஐயப்பா
அகம்ஒன்றி உருகுமுளம் அமர்வாய் அப்பா
பொய்யுடைய பேதமெல்லாம்
போயொழிந்த திருவுருளத்தில் புகுவாய் அப்பா
ஐயப்பா தலைவணங்கும்
ஐயப்பர் தம்மையெல்லாம் உயர்த்தும் அப்பா
மெய்யப்பா என்றிணைந்தோர்
மேன்மைபெற வாழ்வுதரும் மேலோய் அப்பா (3)

வையகமும் வானகமும்
வளமிகு முடிகட்டி வருமே அம்மா
பொய்யகமும் போனகமும்
துறந்துதிரு வடியதனில் புகுமே அம்மா
செய்வனவும் தவிர்வனவும்
சிந்தித்து நல்லறிவு பெறுமே அம்மா
உய்வகைகொள் வழிகாட்ட
ஒளிவடிவில் கலந்தசுடர் மணியே அம்மா (4)

அடிப்பொடியாய்ச் சரணமிட்டுன்
அன்புதரும் வாசலுக்கு வந்தோம் எந்தாய்
படிப்படியாய் உலகமைமறந்து
உன்நினைவில் படிந்துபடிந் தடைந்தோம் எந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடித்தமனம் நெகிழ்ந்துருகித்
தாபமுடன் செருக்கடங்கித் தணிந்தோம் எந்தாய்
படிப்படியாய் பதினெட்டுப்
படியேறிக் கடையேற்றப் பணிந்தோம் எந்தாய் (5)

மெய்யொளிர மனம்ஒளிர
மேவுதலை முடிஒளிர விளங்கும் சோதி
பெயாய்யகலத் தீதகலப்
புன்மையெல்லாம் போயகலப் பொலியும் சோதி
எய்ப்பகல இளைப்பகல
இடரகலத் துயரகல இலங்கும் சோதி
தைப்பூச மகரத்தில்
தனிச்சுடராய்ச் சுடர்விளக்காய் தவழும் சோதி (6)

சோதிவடி வானதொரு
பொருளாகி மலைமீது துலங்கும் தேவ
ஆதிபரம் பொருளாகும்
அரிஅரனின் மகனாகும் அரிய தேவே
பாதிமதி மீதுலவு
மணிமலையான் துணைதழுவும் சபரித் தேவே
நாதமுறும் ஒலிவடிவ
நாநவிலும் சரணமதை நயந்த தேவே (7)

புலிமீதில் அமர்ந்தெமது
புன்னைதவிர் பேரரசே சரணம் அப்பா
வலிதீர வேவளரும்
வலிமைதரும் தளபதியே சரணம் அப்பா
பலிஆர வேகளைப்புப்
பசிதீர வேவருக சரணம் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிதீர வேவருக
கடைக்கணித்துக் காத்துருள்க சரணம் அப்பா (8)

கோவிலிலும் காவினிலும் புழையினிலும்
குன்றினிலும் சுவாமியே சரணம் அப்பா
ஆவியிலும் உடலினிலும் உணர்வினிலும்
அமர்ந்திருக்கும் சுவாமியே சரணம் அப்பா
பூவினிலும் இயற்கையிலும் பொழில்களிலும்
மலைகளிலும் சுவாமியே சரணம் அப்பா
தேவினிலும் தேவனெனும் தெய்வீகத்
திருவடிவே சுவாமியே சரணம் அப்பா (9)

சுவாமியே சரணமையப் பாஅப்பா
சுத்தமனம் தூயவுடல் தருவாய் போற்றி
சுவாமியே சரணமையப் பாஅப்பா
சோதிமிகும் ஒளிவாழ்வை அருள்வாய் போற்றி
சுவாமியே சரணமையப் பாஅப்பா
துலங்குபுகழ் பண்புநலம் தருவாய் போற்றி
சுவாமியே சரணமையப் பாஅப்பா
சோதியினில் கலந்தினைய அருள்வாய் போற்றி (10)

## கண்திறந்து பாரப்பா

கண்திறந்து பாரப்பா கவலைகளைத் தீரப்பா
காவினிலே கிடைத்தவனே கண்திறந்து பாரப்பா
கஜமுக சோதரனே கண்திறந்து பாரப்பா
கந்தனுக்கு இளையவனே கண்திறந்து பாரப்பா(கண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகவரதனே நீ கண்திறந்து பாரப்பா
கனதவ விரதனே நீ கண்திறந்து பாரப்பா
காந்தமலை நாதனே நீ கண்திறந்து பாரப்பா
காருண்ய மூர்த்தியே நீ கண்திறந்து பாரப்பா (கண்)

வனத்திலிருப்பவனே கண்திறந்து பாரப்பா
வன்புலிவாகனனே கண்திறந்து பாரப்பா
தனித்து இருப்பவனே கண்திறந்து பாரப்பா
தவக்கோலம் கொண்டவனே கண்திறந்து பாரப்பா
(கண்)

சங்கட நாசனனே கண்திறந்து பாரப்பா
சண்முகன் சோதரனே கண்திறந்து பாரப்பா
சபரி கிரிசனே நீ கண்திறந்து பாரப்பா
சஞ்சலம் தீர்ப்பவனே கண்திறந்து பாரப்பா (கண்)

அன்புள்ள அப்பனே நீ கண்திறந்து பாரப்பா
அழகான தெய்வமே நீ கண்திறந்து பாரப்பா
அம்பிகையின் மகனே நீ கண்திறந்து பாரப்பா
ஆதரிக்கும் தெய்வமே நீ கண்திறந்து பாரப்பா (கண்)

## கட்டேந்தி வந்தோமையா

வந்தோமையா சபரி வந்தோமையா
கட்டேந்தி சபரிக்கு வந்தோமையா (வந்)

கார்த்திகை நல்லநாள் மாலையிட்டு
மார்கழி நல்லநாள் கட்டும் கட்டி (வந்)

குங்குமப்பொட்டு சந்தனப்பொட்டு வச்சிக்கிட்டு
சாமி சரண நாம மந்திரம் பாடிக்கிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்ப திந்திமிக்கு சாமியே திந்திமிக்கு
ஜிகுதாளம் போட்டுக்கிட்டு பேட்டைதுள்ளி ஆடிக்கிட்டு
கட்டேந்தி உன்னைக்காண வந்தோமையா (வந்)

காட்டானை கூட்டத்தை கண்டுகிட்டு
கடுவாய் புலிகளையும் பார்த்துக்கிட்டு
சாமிசரணம் ஐயப்பசரணம் பாடிக்கிட்டு
ஐயப்ப திந்திமிக்கு சாமியே திந்திமிக்கு
ஜிகுதாளம் போட்டுக்கிட்டு பேட்டைதுள்ளி ஆடிக்கிட்டு
கட்டேந்தி உன்னைக்காணவந் தோமையா (வந்)

பம்பா நதியினில் குளித்துவிட்டு
பாவங்களை அறவே போக்கிவிட்டு
பக்தியுடன் உந்தன்நாமம் பாடிக்கிட்டு
ஐயப்ப திந்திமிக்கி சாமியே திந்திமிக்கி
ஜிகுதாளம் போட்டுக்கிட்டு பேட்டை துள்ளி ஆடிக்கிட்டு
கட்டேந்தி உன்னைக்கான வந்தோமையா (வந்)

## அழகுமலை வாழும் ஐயப்பா

மலையாம் மலையழகாம் ஐயப்போ - சாமியே
மலையைச் சுத்தித் தோப்பழகாம் ஐயப்போ - சாமியே

பாக்கு விளையும் மலை ஐயப்போ - சாமியே
பக்தர்கள் கூடும் மலை ஐயப்போ - சாமியே

ஊக்கம் அளிக்கும் மலை ஐயப்போ - சாமியே
உத்திராட்சம் காய்க்கும் மலை ஐயப்போ - சாமியே

காக்கும் காந்த மலை ஐயப்போ - சாமியே
கரடி புலிகள் வாழும் மலை ஐயப்போ - சாமியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கு விளையும் மலை ஐயப்போ - சாமியே
தேனாறு பாயும் மலை ஐயப்போ - சாமியே

உலகம் அறிந்த மலை ஐயப்போ - சாமியே
ஊமைகள் பேசும் மலை ஐயப்போ - சாமியே

பம்பைநதி பிறந்த மலை ஐயப்போ - சாமியே
பாவமெல்லாம் தீரும் மலை ஐயப்போ - சாமியே

மலையாம் மலைகடந்து ஐயப்போ - சாமியே
மகரஜோதி காணவாரோம் ஐயப்போ - சாமியே

ஐந்துமலைக் கதிபதியே ஐயப்போ - சாமியே
அம்பலத்தை காணவாரோம் ஐயப்போ - சாமியே

சந்தனம் விளையும் மலை ஐயப்போ - சாமியே
சத்தியம் நிலைக்கும் மலை ஐயப்போ - சாமியே

## நீ எங்கிருந்தாலும் நான் வருவேன்

(01) எத்தனை பிறவிகளை எடுத்தாலும் - நீ
எங்கே இருந்தாலும் தேடிவருவேன் உன்னைத்
தேடிவருவேன்

(02) மயிலாக நான் பிறந்தால் ஆடி வருவேன்
குயிலாக நான் பிறந்தால் பாடி வருவேன் உன்னைப்
பாடிவருவேன்

(03) பாம்பாக நான் பிறந்தால் ஊர்ந்து வருவேன்
பல்லியாக நான் பிறந்தால் சொல்லி வருவேன்
குறி சொல்லி வருவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(04) புலியாக நான் பிறந்தால் பாய்ந்து வருவேன்
புள்ளிமானாய் நான் பிறந்தால் துள்ளி வருவேன்
உன்னிடம் துள்ளி வருவேன்

(05) பூனையாக நான் பிறந்தால் உன்னைச் சுத்தி வருவேன்
யானையாக நான் பிறந்தால் ஓடி வருவேன் - நான்
உன்னிடம் ஓடி வருவேன்

(06) மானாக நான் பிறந்தால் தாவி வருவேன்
தேனாக நான் பிறந்தால் தேடிவருவேன் - உன்னைத்
தேடி வருவேன்

(07) சோலையிலே நான் பிறந்தால் பூக்கள் கொடுப்பேன்
மாலையாக நான் பிறந்தால் மார்பில் இருப்பேன்
உந்தன் மார்பில் இருப்பேன்

(08) தண்ணீராய் நான் பிறந்தால் தாவி வருவேன்
கண்ணீராய் நான் பிறந்தால் கண்ணில் இருப்பேன்
உந்தன்கண்ணில் இருப்பேன்

(09) கழுகாக நான் பிறந்தால் உன்னை வட்டமிடுவேன்
மெழுகாக நான் பிறந்தால் உருகி மகிழ்வேன்
உன்னிடம் உருகி மகிழ்வேன்

(10) எறும்பாக நான் பிறந்தால் ஊர்ந்து வருவேன்
கரும்பாக நான் பிறந்தால் பக்கம் வருவேன்
உந்தன் பக்கம் வருவேன்

## மணக்கும் மலரே ஐயப்பா

என்ன மணக்குது எங்கே மணக்குது
எல்லாம் மணக்குது ஐயப்பன் மலையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமேகா வெளியீடு

01. அல்லி மலர் மணமும் எங்கே மணக்குது
ஐயப்பன் சுவாமியின் மேலே மணக்குது

02. மல்லிகைப்பூ மரிக்கொழுந்து எங்கே மணக்குது
மரகத மூர்த்தியின் மேலே மணக்குது

03. முல்லை மலர் மனமும் எங்கே மணக்குது
மோகன பாலகனின் மேலே மணக்குது

04. சம்பங்கி ரோஜாவும் எங்கே மணக்குது
சாஸ்தாவான பாலகனின் மேலே மணக்குது

05. பிச்சி இருவாச்சியும் எங்கே மணக்குது
பிரியமுள்ள பாலகனின் மேலே மணக்குது

06. காட்டு மல்லி நாட்டு மல்லி எங்கே மணக்குது
கருணாகரமூர்த்தியின் மேலே மணக்குது

07. குங்குமப்பூ ஜவ்வாது எங்கே மணக்குது
மங்கள் மூர்த்தியின் மேலே மணக்குது

08. அத்தர் புனுகு வகை எங்கே மணக்குது
அச்சங் கோவில் அரசனின் மேலே மணக்குது

09. கொழுந்து மனோரஞ்சிதம் எங்கே மணக்குது
குளத்துப்புழை பாலகனின் மேலே மணக்குது

10. பன்னீரும் கஸ்தூரியும் எங்கே மணக்குது
பந்தளத்து செல்வனின் மேலே மணக்குது

11. பரிமள சாம்பிராணி எங்கே மணக்குது
எரிமேலி சாஸ்த்தாவின் மேலே மணக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சாம்பிராணி வாடையது எங்கே மணக்குது
சபரிமலை உச்சியின் மேலே மணக்குது

13. கற்பூர வாடையது எங்கே மணக்குது
காந்தமலை ஜோதின் மேலே மணக்குது

14. பங்கான நெய்மணமும் எங்கே மணக்குது
தேங்காயின் திருவுருவின் மேலே மணக்குது

15. தாழம்பூ வாடையது எங்கே மணக்குது
ஸ்ரீதர்ம சாஸ்தாவின் மேலே மணக்குது

16. மஞ்சள் பொடி மகிமை எங்கே மணக்குது
மஞ்சமாதா சன்னதியின் தானே மணக்குது

17. சந்தனவாடையது எங்கே மணக்குது
சாஸ்தாவின் சன்னதியில் தானே மணக்குது

18. சக்கரை ஏலம் பாயாசம் எங்கே மணக்குது
சரணம் சரணம் எனச் சொல்லத்தானே இனிக்குது

## சஞ்சலங்கள் தீர்த்துவரும் சபரிமலை ஈசா

*"கண்ணிலே இருப்தென்ன கன்னி இனமானே"*
*என்ற இசை*

அம்பலத் தமர்ந்தவனே சபரிமலை ஈசா
ஆயகலை கற்றவனே சபரிமலை ஈசா
அச்சுதனே காத்திடுவாய் சபரிமலை ஈசா
ஆல காலன் மைந்தனே சபரிமலை ஈசா
கண்ணுக்கு இமை போல சபரிமலை ஈசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியங்கள் போற்றுகின்ற சபரிமலை ஈசா
காந்தமலை வாசனே சபரிமலை ஈசா
கண்கண்ட தேவனே சபரிமலை ஈசா
பதினெட்டாம் படிமேவும் சபரிமலை ஈசா
பார்புகழ உற்றவனே சபரிமலை ஈசா
துதிப்போர்க்கு துணையானாய் சபரிமலை ஈசா
தொல்லுலகில் வல்லவனே சபரிமலை ஈசா
மஹிஷிசம் ஹாரனே சபரிமலை ஈசா
மணிமகுட தீபனே சபரிமலை ஈசா
மணிகண்டன் பெயர் அடைந்தாய் சபரிமலை ஈசா
மாதவமே பேரொளியே சபரிமலை ஈசா
பம்பையில் பிறந்திட்டாய் சபரிமலை ஈசா
பந்தள தேவனே சபரிமலை ஈசா
பக்தர்கள் நாதனே சபரிமலை ஈசா
பஞ்சபூத மானவனே சபரிமலை ஈசா
குஞ்சரத்தான் இளையவனே சபரிமலை ஈசா
சஞ்சலங்கள் தீர்த்துவரும் சபரிமலை ஈசா
சாமியே சரணமையப்பா சபரிமலை ஈசா

## "திருச்செந்தூரின் கடலோரத்தில்" – மெட்டு

பம்பாநதியின் கடலோரத்தில்
பந்தளநாதன் அவதாரம்
பாடித்தேடி வருவோர்க்கெல்லாம்
புண்ணியம் கோடி தேடிவரும் (பம்பா)

ஜோதியாய் நின்றஇடம் அவன் ஆதியாய் வந்த இடம்
சித்திரைத் தையினிலும் வரும் மார்கழித் திங்களிலும்
சபரி திருநாள் காணும் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பா நதியினில் காணும் தீபங்கள்
ஒளியா? அவன் விழியா?
பக்தர்கள் பாடிடும் பஜனையின் பாடல்கள்
பரமனவன் மொழியா?

அரசனாக ஆட்சிசெய்யும் அச்சங்கோவில் ஒன்று
அறம் வளர்க்கும் அய்யாவாய் ஆரியங்காவு ஒன்று
கொஞ்சிவரும் குழந்தையாக குளத்துப்புழை ஒன்று
கொடையருளும் சாஸ்த்தாவாக எரிமேலி ஒன்று
சகலருக்கும் அருள்புரியும சபரிமலை ஒன்று
ஐந்துமலை கடந்து வந்தோம் ஐயப்பனே இங்கு

பொன்மலையில் நடம்புரியும் வன்புலியின் வேந்தா
பொன்மலரின் வீற்றிருக்கும் புண்ணியனே வரந்தா
நல்லவர்கள் ஓடிவந்தோம் வலந்தேடி நின்றோம்
அரிகரனின் மைந்தா
வருவாய்........ அருள்வாய்.......ஐயப்பா

## "குன்றத்திலே குமரனுக்கு கொண்டாட்டம்" - மெட்டு

காந்தமலை வாசனுக்கு கொண்டாட்டம் - அங்கு
காத்திருக்கும் பக்தரெல்லாம் வண்டாட்டம் கொண்டாட்டம்
காந்தமலை வாசனுக்கு கொண்டாட்டம்
தேவாதி தேவனவன் சபரிகிரீசன்
திருப்பெயரைப் பாடுவோர்க்கு அவனே ஈசன்
அன்பு பண்பு இன்பம் இனிமை ஈயும் ஐயனை
பாடி வந்தால் பணிந்து வந்தால்
முக்தி கிடைக்குமே முக்தி கிடைக்குமே.... (காந்தமலை)

சரணம் சொல்லுங்கள் ஐயனின் மேலே
வரனும் ஐயனும் வன்புலிமேலே

**கோரஸ் :**

சரணம்ஐயா ஸ்வாமி சரணம் ஐயப்பா
சரணம்ஐயா ஸ்வாமி சரணம் ஐயப்பா
சந்தனம் பூசுங்கள் மாலையைச் சூடுங்கள்
ஐயப்பனைப் பாடுங்கள் அவனையே நாடுங்கள்
ஐயனுக்கு ஓம்ஓம் ஈசனுக்கு ஓம்ஓம்

**கோரஸ் :**

ஐயனுக்கு ஓம்ஓம் ஈசனுக்கு ஓம்ஓம்
சரணம்ஐயா அரோகரா
ஸ்வாமி சரணம்ஐயா அரோகரா (காந்தமலை)

## நூற்றியெட்டு சரணநாம ஸ்தோத்திரம்

ஓம் அகத்தீச்வர சுதா சரணம் ஐயப்பா
ஓம் அகத்தியருக்கு அருள்வோனே சரணம் ஐயப்பா
ஓம் அகந்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் அகமாயை களைவோனே சரணம் ஐயப்பா
ஓம் அகண்ட வடிவமே சரணம் ஐயப்பா
ஓம் அகண்ட பரிபூரணா சரணம் ஐயப்பா
ஓம் அகக்கடவுளே சரணம் ஐயப்பா
ஓம் அகத்தில் உறைந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் அகங்களிக்கச் செய்வாய் சரணம் ஐயப்பா
ஓம் அகக்கண் தெரியச் செய்வாய் (10) சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அகிலேச்வரி சுதா சரணம் ஐயப்பா
ஓம் அகிலாண்டேஸ்வரி புத்ரா சரணம் ஐயப்பா
ஓம் அகிலோர் மகனே சரணம் ஐயப்பா
ஓம் அகில நாயகனே சரணம் ஐயப்பா
ஓம் அகோரன் மகனே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினித் தேவன் அடிபணியும் சரணம் ஐயப்பா
ஓம் அக்ரமத்தை அழிப்பாய் சரணம் ஐயப்பா
ஓம் அங்கையற் கண்ணம்மை மைந்தர் சரணம் ஐயப்பா
ஓம் அங்கஹீனம் அகற்றினாய் சரணம் ஐயப்பா
ஓம் அசகாய சூரனே (20) சரணம் ஐயப்பா

ஓம் அசூயை அகற்றுவோனே சரணம் ஐயப்பா
ஓம் அச்சந் தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் அச்சுதன் மகனே சரணம் ஐயப்பா
ஓம் அஞ்ஞானம் போக்குவோனே சரணம் ஐயப்பா
ஓம் அஞ்சாநெஞ்சம் அளிப்பாய் சரணம் ஐயப்பா
ஓம் அடியார் துயரகற்றும் சரணம் ஐயப்பா
ஓம் அடியைத் தெழுவோம் சரணம் ஐயப்பா
ஓம் அடியவர்க்கடியவனே சரணம் ஐயப்பா
ஓம் அடிமைத்தளை அகற்றுவாய் சரணம் ஐயப்பா
ஓம் அடைக்கலமடைந்தோம் (30) சரணம் ஐயப்பா

ஓம் அட்ட மூர்த்தியின் மகனே சரணம் ஐயப்பா
ஓம் அட்டமாசித்தியளிக்கும் சரணம் ஐயப்பா
ஓம் அட்டத்திக்கதிபதி சரணம் ஐயப்பா
ஓம் அட்டலஷ்மி சுதனே சரணம் ஐயப்பா
ஓம் அட்டபாலர் போற்றியவா சரணம் ஐயப்பா
ஓம் அட்டநாகத்ததிபனே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் அணிபெறும் படைப்பே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அணியே அரும்மணியே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அணைத்திட ஓடிவா | | சரணம் ஐயப்பா |
| ஓம் அண்டநாயகி சுதா | (40) | சரணம் ஐயப்பா |
| ஓம் அண்ணாமலை புதல்வா | | சரணம் ஐயப்பா |
| ஓம் அண்டினோரை ஆதரிக்கும் | | சரணம் ஐயப்பா |
| ஓம் அண்டசன்வளர்த்தவா | | சரணம் ஐயப்பா |
| ஓம் அண்டா தொழும்பாதனே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிர்வெடிப்பிரியனே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிசயப் பிறவியே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிகுண அப்பனே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிமோஷம் அளிப்பவனே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிதெய்வம் நீயல்லவா | | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிசயணன் மகனே | (50) | சரணம் ஐயப்பா |
| ஓம் அநுக்கரஹம் செய்ய வேணும் | | சரணம் ஐயப்பா |
| ஓம் அந்தரியின் மகனே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அந்திவண்ணன் மகனே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அபயம் அருள்வோனே | | சரணம் ஐயப்பா |
| ஓம் அபவாதம் அகற்றுவோய் | | சரணம் ஐயப்பா |
| ஓம் அபாயம் வராது காப்பாய் | | சரணம் ஐயப்பா |
| ஓம் அபிராமி புதல்வன் | | சரணம் ஐயப்பா |
| ஓம் அபிலாசை பூர்த்திசெய்வாய் | | சரணம் ஐயப்பா |
| ஓம் அப்புலிங்கேஸ்வரர் சுதா | | சரணம் ஐயப்பா |
| ஓம் அப்பனுக்கு அன்புடையாய் | (60) | சரணம் ஐயப்பா |
| ஓம் அமரத்தன்மை அளிக்கும் | | சரணம் ஐயப்பா |
| ஓம் அமரர்க்கு உபகாரா | | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அமரர் தினந்துதிக்கும் சரணம் ஐயப்பா
ஓம் அமரவாழ்வு அருள்வாய் சரணம் ஐயப்பா
ஓம் அமராவதியோர்கருளும் சரணம் ஐயப்பா
ஓம் அமரேச பூஜிதா சரணம் ஐயப்பா
ஓம் அமரி அருமை மைந்தா சரணம் ஐயப்பா
ஓம் அமிர்தலிங்கன் சுதா சரணம் ஐயப்பா
ஓம் அமுதம் அளித்திடுவாய் சரணம் ஐயப்பா
ஓம் அமைதியை அளிப்பாய் (70) சரணம் ஐயப்பா

ஓம் அம்பிகையின் புதல்வாய் சரணம் ஐயப்பா
ஓம் அம்பலத்தின் அருமை சுதா சரணம் ஐயப்பா
ஓம் அம்பரீசன் மகனே சரணம் ஐயப்பா
ஓம் அம்பலத்தாடியோன் சுதா சரணம் ஐயப்பா
ஓம் அம்புவில் தரித்தோனே சரணம் ஐயப்பா
ஓம் அம்புஜ மலர்பாதனே சரணம் ஐயப்பா
ஓம் அம்பலவன் புதல்வனே சரணம் ஐயப்பா
ஓம் அயன் மனைவி மகனே சரணம் ஐயப்பா
ஓம் அரசை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் அரசனருள் மகனே (80) சரணம் ஐயப்பா

ஓம் அரவணையான் சுதனே சரணம் ஐயப்பா
ஓம் அரவிந்தஷன் சுதா சரணம் ஐயப்பா
ஓம் அரங்கநாதன் மகனே சரணம் ஐயப்பா
ஓம் அரவாபரணன் சுதா சரணம் ஐயப்பா
ஓம் அரன்மகன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் அரியமா ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் அரியமா உனக்குகரியானான் சரணம் ஐயப்பா
ஓம் அரிமா வாகனனே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அரியேறி மகனே சரணம் ஐயப்பா
ஓம் அரிஹரசுதனே (90) சரணம் ஐயப்பா
ஓம் அரிமருகன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் அருணோதயவடிவே சரணம் ஐயப்பா
ஓம் அருட்கலையுருவே சரணம் ஐயப்பா
ஓம் அருளே பொருளே சரணம் ஐயப்பா
ஓம் அருள் மயமானவனே சரணம் ஐயப்பா
ஓம் அருணகிரிகன்பன் தம்பி சரணம் ஐயப்பா
ஓம் அருள்கொடையோனே சரணம் ஐயப்பா
ஓம் அருச்சனை புரிகுவோம் சரணம் ஐயப்பா
ஓம் அருங்கலை அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் அருள்தர அவதரித்தாய் (100) சரணம் ஐயப்பா
ஓம் அருமருந்தருள்வாய் சரணம் ஐயப்பா
ஓம் அருமை மிகுந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் அருந்தவக் கனியே சரணம் ஐயப்பா
ஓம் அருளால் அழைப்பனே சரணம் ஐயப்பா
ஓம் அரும்பிணி தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் அருளும் அளித்திடுவாய் சரணம் ஐயப்பா
ஓம் அருள்சுரக்கும் தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் அரடையாய் அவதரித்தாய் (108) சரணம் ஐயப்பா

## ஸ்ரீ ஐயப்பன் 108 நாமார்ச்சனைகள்

01. அய்யப்பா தெய்வமே சரணம் பொன் ஐயப்பா
02. அமரர் துயர் தீர்த்தவா சரணம் பொன் ஐயப்பா
03. அச்சன் கோவில் அரசே சரணம் பொன் ஐயப்பா
04. அமுதா நதிவாசனே சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 05. அன்னதான பிரபுவே | சரணம் பொன் ஐயப்பா |
| 06. ஆனைமுகன் தம்பியே | சரணம் பொன் ஐயப்பா |
| 07. ஆறுமுகன் சோதரா | சரணம் பொன் ஐயப்பா |
| 08. ஆரியங்காவு அய்யனே | சரணம் பொன் ஐயப்பா |
| 09. ஆபத் பாந்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 10. இமையவர் மைந்தனே | சரணம் பொன் ஐயப்பா |
| 11. இன்பம் அளிப்பவா | சரணம் பொன் ஐயப்பா |
| 12. ஈசனார் புதல்வனே | சரணம் பொன் ஐயப்பா |
| 13. ஈடில்லா தெய்வமே | சரணம் பொன் ஐயப்பா |
| 14. உமையவள் பாலா | சரணம் பொன் ஐயப்பா |
| 15. உலகெலாம் காப்பவா | சரணம் பொன் ஐயப்பா |
| 16. என் குருநாதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 17. எருமேலி சாஸ்த்தாவே | சரணம் பொன் ஐயப்பா |
| 18. எங்கள் குல தேவனே | சரணம் பொன் ஐயப்பா |
| 19. எம் இதயம் கலந்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 20. ஏகாந்தமானவரே | சரணம் பொன் ஐயப்பா |
| 21. ஏழைப்பங்காளனே | சரணம் பொன் ஐயப்பா |
| 22. ஏழைத்துயர் தீர்த்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 23. ஏழுமலை வாசனே | சரணம் பொன் ஐயப்பா |
| 24. ஐங்கரனுக்கிளையவா | சரணம் பொன் ஐயப்பா |
| 25. ஐயப்பா தெய்வமே | சரணம் பொன் ஐயப்பா |
| 26. ஒப்பில்லா மணியே | சரணம் பொன் ஐயப்பா |
| 27. ஓங்காரமானவா | சரணம் பொன் ஐயப்பா |
| 28. கண்கண்ட நாதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 29. கற்பூரப் பிரியனே | சரணம் பொன் ஐயப்பா |
| 30. காளைகட்டி தெய்வமே | சரணம் பொன் ஐயப்பா |
| 31. காந்தமலை வாசனே | சரணம் பொன் ஐயப்பா |
| 32. காத்தருள் தெய்வமே | சரணம் பொன் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 33. குளத்துப் புழைபாலகா | சரணம் பொன் ஐயப்பா |
| 34. குருடு தீர்த்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 35. குற்றம் பொறுப்பவா | சரணம் பொன் ஐயப்பா |
| 36. குறைகள் தீர்ப்பவா | சரணம் பொன் ஐயப்பா |
| 37. கேரள சத்ரியாச்சாரனே | சரணம் பொன் ஐயப்பா |
| 38. கேடு தவிர்ப்பவா | சரணம் பொன் ஐயப்பா |
| 39. கோவிந்தன் புதல்வனே | சரணம் பொன் ஐயப்பா |
| 40. கோட்டை கருப்பசாமியே | சரணம் பொன் ஐயப்பா |
| 41. கோமதி புதல்வனே | சரணம் பொன் ஐயப்பா |
| 42. கோபம் அறுத்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 43. கொண்டல் மணி வண்ணனே | சரணம் பொன் ஐயப்பா |
| 44. கொச்சு கடுத்த சாமியே | சரணம் பொன் ஐயப்பா |
| 45. கொடும்புலி வாகனா | சரணம் பொன் ஐயப்பா |
| 46. கொடையாளி வள்ளலே | சரணம் பொன் ஐயப்பா |
| 47. சரங்குத்தி ஆலே | சரணம் பொன் ஐயப்பா |
| 48. சபரி கிரீசனே | சரணம் பொன் ஐயப்பா |
| 49. சங்கரன் மைந்தனே | சரணம் பொன் ஐயப்பா |
| 50. சங்கரி புதல்வனே | சரணம் பொன் ஐயப்பா |
| 51. சாந்த சொரூபனே | சரணம் பொன் ஐயப்பா |
| 52. சாபம் அகற்றுவாய் | சரணம் பொன் ஐயப்பா |
| 53. சாந்த பீடனே | சரணம் பொன் ஐயப்பா |
| 54. சாஸ்தாவே சரணம் | சரணம் பொன் ஐயப்பா |
| 55. சித்தம் கலந்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 56. சிவனார் புதல்வனே | சரணம் பொன் ஐயப்பா |
| 57. சிம்காசனனே | சரணம் பொன் ஐயப்பா |
| 58. சினத்தை அறுத்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 59. சுந்தர ரூபனே | சரணம் பொன் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 60. சூராதி சூரனே | சரணம் பொன் ஐயப்பா |
| 61. சூடாமணி தரித்தவர் | சரணம் பொன் ஐயப்பா |
| 62. சூரிகாயுதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 63. சூரியப்பிரகாசனே | சரணம் பொன் ஐயப்பா |
| 64. சொர்ணமணி மார்பனே | சரணம் பொன் ஐயப்பா |
| 65. சொரி முத்தையனே | சரணம் பொன் ஐயப்பா |
| 66. தபநிலை அமர்ந்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 67. தர்ம சாஸ்தாவே | சரணம் பொன் ஐயப்பா |
| 68. தாய் தந்தையானவர் | சரணம் பொன் ஐயப்பா |
| 69. தாழினை சரணடைந்தோம் | சரணம் பொன் ஐயப்பா |
| 70. துளசிமணி மார்பனே | சரணம் பொன் ஐயப்பா |
| 71. துன்பம் துடைப்போனே | சரணம் பொன் ஐயப்பா |
| 72. நாராயணன் சுதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 73. நாகராஜ சமேதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 74. நீலிலை வாசனே | சரணம் பொன் ஐயப்பா |
| 75. நிலகண்டன் மைந்தனே | சரணம் பொன் ஐயப்பா |
| 76. நெய் அபிஷேகனே | சரணம் பொன் ஐயப்பா |
| 77. நெற்றிக்கண்ணன் மகனே | சரணம் பொன் ஐயப்பா |
| 78. பம்பாநதி வாசனே | சரணம் பொன் ஐயப்பா |
| 79. பந்தள ராஜகுமாரனே | சரணம் பொன் ஐயப்பா |
| 80. பந்தள பூபதி பாலனே | சரணம் பொன் ஐயப்பா |
| 81. பகவதி சுதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 82. பக்தர் சகாயனே | சரணம் பொன் ஐயப்பா |
| 83. பாப வினாசனா | சரணம் பொன் ஐயப்பா |
| 84. பாண்டியர் கலிதீர்த்தவா | சரணம் பொன் ஐயப்பா |
| 85. பிரப மச்சரியனே | சரணம் பொன் ஐயப்பா |
| 86. பிரம்மப் பிரியனே | சரணம் பொன் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 87. புவன நாயகனே | சரணம் பொன் ஐயப்பா |
| 88. புஸ்கலாம்பிகா சுதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 89. பூதகண நாதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 90. பூரணலங்காரனே | சரணம் பொன் ஐயப்பா |
| 91. பொன்னம்பல வாசனே | சரணம் பொன் ஐயப்பா |
| 92. போற்றிப் பணிந்தோம் | சரணம் பொன் ஐயப்பா |
| 93. மந்திரமூர்த்தி மைந்தனே | சரணம் பொன் ஐயப்பா |
| 94. மணிகண்ட நாதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 95. மங்களாம்பிகை சமேதா | சரணம் பொன் ஐயப்பா |
| 96. மாளிகை புறத்தம்மையே | சரணம் பொன் ஐயப்பா |
| 97. மாயாவதார சுதா | சரணம் பொன் ஐயப்பா |
| 98. மோகினி புதல்வனே | சரணம் பொன் ஐயப்பா |
| 99. மோகன ரூபனே | சரணம் பொன் ஐயப்பா |
| 100. ரத்தின கிரீடனே | சரணம் பொன் ஐயப்பா |
| 101. ரஷிப்பாய் சுதனே | சரணம் பொன் ஐயப்பா |
| 102. லட்சுமிகாந்த மைந்தனே | சரணம் பொன் ஐயப்பா |
| 103. லட்சசூரியம் பிரகாசனே | சரணம் பொன் ஐயப்பா |
| 104. வன்புலிவாகனா | சரணம் பொன் ஐயப்பா |
| 105. வரதவினாயக சோதரா | சரணம் பொன் ஐயப்பா |
| 106. வாணிபப்பிரியனே | சரணம் பொன் ஐயப்பா |
| 107. வாபர் சமேதா | சரணம் பொன் ஐயப்பா |
| 108. வாழ்க நீ ஐயப்பா | சரணம் பொன் ஐயப்பா |

அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்து மன்னித்து காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சபரிமலைவாழ் அரிகரசுதன் ஆனந்த சித்தன் அய்யன் அய்யப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணம் சரணமய்யா

சரணம் சரணமய்யா சரணம் சரணமய்யா
சரணம் சரணமய்யா ஐயப்பா - எங்க
சபரிமலை சாஸ்தாவே ஐயப்பா

காலமெல்லாம் காத்திருந்து
கார்த்திகையில் மாலையிட்டு
கடும் விரதம் இருந்து வந்தோம் ஐயப்பா
கொஞ்சம் கண்திறந்து பார்க்கணுமே ஐயப்பா

காலைமாலை குளிச்சுபுட்டு
காவி வேட்டி கட்டிக்கிட்டு
காடுமலை தாண்டி வாரோம் ஐயப்பா - எங்களை
காப்பாத்த வேண்டுமய்யா ஐயப்பா

கன்னிமார்கள் எல்லோரும் பூஜை செய்து
கருத்துடனே பூஜை செய்து
கற்பூரம் காட்டி வாரோம் ஐயப்பா - உனக்கு
கற்பூரம் காட்டி வாரோம் ஐயப்பா

பாலும் பழமும் எடுத்து வச்சு
பஞ்சாமிர்தமும் தானும் வச்சு
பலகார வகைகளோட ஐயப்பா - உனக்கு
படைச்சு வச்சு கும்பிடுவோம் ஐயப்பா

நெய் உனக்கு பிடிக்குமின்னு
நெய் தேங்காய் கொண்டு வாரோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இப்போ வந்திடய்யா ஐயப்பா - உன்னை
தேடி நாங்கள் வந்து நின்றோம் ஐயப்பா

இருமுடியை தூக்கிகிட்டு
எரிமேலி வந்தடைந்தோம்
அருமையாக பேட்டையாடி ஐயப்பா - நாங்கள்
அடிபணிந்தோம் உந்தனையே ஐயப்பா

பம்பையிலே குளித்து வந்தோம்
பாடி ஆடி தொழுது வந்தோம்
பந்தளத்து பாலகனே ஐயப்பா - உன்
பக்தர்களை காக்க வேணும் ஐயப்பா

நீலிமலை ஏறும் போது
நெஞ்சுருக சரணம் சொண்ணோம்
நீ இறங்கி வந்திடப்பா ஐயப்பா - எங்க
நிலைமை எல்லாம் எடுத்து சொன்னோம் ஐயப்பா

சபரி பீடம் தானும் கண்டோம்
சரங்குத்தியாலும் கண்டோம்
சத்தியத்தின் படிகள் கண்டோம் ஐயப்பா
உந்தன் சந்நிதியை கண்டுகிட்டோம் ஐயப்பா

சாந்த சொரூபனே ஐயப்பா உன்
தரிசனத்தை கண்டுகிட்டோம் ஐயப்பா
காந்தமலை ஜோதிதனை ஐயப்பா - எமக்கு
கண்குளிர காட்டிடுவாய் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியும் அரனும் சேர்ந்து
அருமையாக பெற்றெடுத்த ஐயப்பா
அன்பு வடிவமானவனே ஐயப்பா - உனக்கு
அடிபணிந்து தொண்டு செய்வோம் ஐயப்பா

## சன்னதியில் கட்டுக்கட்டி

சன்னதியில் கட்டுக்கட்டி தன்னான்னானன்ன - நாங்க
சபரிமலை பயணம் போறோம் தில்லால்லேலேல்லோ

கார்த்திகையில் மாலைபோட்டு தன்னான்னானன்ன - நாங்க
கடும்பயணம் போறோமுங்க தில்லால்லேலேல்லோ

மார்கழியில் கட்டுந்தாங்கி தன்னான்னானன்ன - நாங்க
மணிகண்டனைப் பார்க்கப்போறோம் தில்லால்லேலேல்லோ

எரிமேலியில் பேட்டை துள்ளி தன்னான்னானன்ன - நாங்க
ஏறிடுவோம் சபரிமலை தில்லால்லேலேல்லோ

அழுதையில் ஸ்நானம்செய்து தன்னான்னானன்ன - நாங்க
அன்னதான மிட்டிடுவோம் தில்லால்லேலேல்லோ

பம்பையில் ஸ்நானம் செய்து தன்னான்னானன்ன - நாங்க
பக்திகள் கொண்டாடிடுவோம் தில்லால்லேலேல்லோ

ஐந்துமலை கடந்து தன்னான்னானன்ன - நாங்க
ஐயப்பனைக் காணப்போறோம் தில்லால்லேலேல்லோ

மலையாம் மலைகடந்து தன்னான்னானன்ன - நாங்க
மகரஜோதி காணப்போறோம் தில்லால்லேலேல்லோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டாம் படியேறி தன்னான்னானான்ன - நாங்க
பாவங்களைத் தீர்க்கப்போறோம் தில்லால்லேலேல்லோ

## பச்சைப்பிள்ளை பவளப்பிள்ளை சாமி

பச்சப்பிள்ளை பவளப்பிள்ளை சாமி
பாண்டு ரெங்கன் பெத்த பிள்ளை
பம்பையிலே பிறந்த பிள்ளை - சாமி
பந்தளத்திலே வளர்ந்த பிள்ளை - ஐயப்பசாமி

கார்த்திகை மாலையிட்டு
கடும்பயணம் போகச் சொல்லி
மார்கழியில் கட்டும்கட்டி சாமி
மணிகண்டனைப் பார்க்கப்போறோம் - ஐயப்பசாமி

அச்சங்கோயில் ஆண்டபிள்ளை
அரசாட்சி செய்த பிள்ளை
அண்டினோரை காத்தா பிள்ளை சாமி
அனைவருக்கும் சொந்த பிள்ளை - ஐயப்பசாமி

குளத்துப்புழை என்னும் ஊரில் சாமி
குழந்தை வடிவம் கொண்ட பிள்ளை
கண்ணழகு கொண்ட பிள்ளை சாமி அது
கர்ம வினைகள் தீர்க்கும் பிள்ளை - ஐயப்பசாமி

குருவின் பிள்ளைக்கு கண்திறந்து சாமி
குருதட்சனை கொடுத்த பிள்ளை சாமி
தாயின் நோயை தீர்த்திடவே சாமி
நீ புலியின் மேலே வந்த பிள்ளை சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ம சாஸ்தா அவதாரம் சாமி
சபரிமலையில் இருக்கும் பிள்ளை
பஜனைபாடும் பக்தர்களை சாமி
நீ காத்து நிற்கும் காட்டுப்பிள்ளை சாமி

## ஒரு மண்டலம் விரதம்

ஒரு மண்டலம் விரதம் கொண்டோம் ஐயப்பா! சாமியே!
உன் சன்னதியை காண வாரோம் ஐயப்பா! ஐயப்பா! ஐயப்பா!
சரணம் சரணம் என்றோம் ஐயப்பா! சாமியே!
உனை சாஸ்தாவம் மண்டியிட்டோம் ஐயப்பா! ஐயப்பா!

கார்த்திகை மாதம் முதல் ஐயப்பா! சாமியே!
உனை கனிவோடு கொண்டாடுவோம்
ஐயப்பா! ஐயப்பா! ஐயப்பா!
மார்கழி மாதம் முதல் ஐயப்பா! சாமியே!
மண்டல பூஜை கொண்டாடுவோம் ஐயப்பா! ஐயப்பா!
ஐயப்பா! - ஒரு மண்டலம்

காட்டானை வாழுமிடம் ஐயப்பா! சாமியே!
கரடி புலி பாய்ந்தோடும் ஐயப்பா! ஐயப்பா! ஐயப்பா!
இல்லறத்தை நான் மறந்தேன் ஐயப்பா! சாமியே!
உந்தன் நல்லறத்தை காட்டிடுவாய் ஐயப்பா!
ஐயப்பா! ஐயப்பா!

சபரிமலை மேலிருக்கும் ஐயப்பா! சாமியே!
எங்கள் சங்கடத்தை போக்கிடுவாய் ஐயப்பா! ஐயப்பா!
ஐயப்பா! - ஒரு மண்டலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை செய்யாமலே ஐயப்பா! சாமியே!
வேண்டியதை தந்திடுவாய் ஐயப்பா! ஐயப்பா! ஐயப்பா!

போதனை செய்யாமலே ஐயப்பா! சாமியே!
ஜோதிதனை காட்டிடுவாய் ஐயப்பா! ஐயப்பா! ஐயப்பா!
நெய் தேங்காய் காணிப்பணம் ஐயப்பா! சாமியே!
உன் சன்னதிக்கே கொண்டு வாரோம் ஐயப்பா! ஐயப்பா!
ஐயப்பா! - ஒரு மண்டலம்

## தள்ளாடி தள்ளாடி வர்றோமய்யா

தள்ளாடி தள்ளாடி நடைநடந்து - நாங்கள்
சபரிமலை நோக்கி தான் வந்தோமய்யா - தள்ளாடி

கார்த்திகை நல்ல நாளில் மாலையும் போட்டுக்கிட்டு
காலையிலும் மாலையிலும் சரணங்கள் சொல்லிக்கிட்டு
(சாமியே ஐயப்போ! ஐயப்பா! ஐயப்பா! சாமியே!)
சரணங்கள் சொல்லிக்கிட்டு வந்தோமய்யா
சபரிமலை நோக்கி நாங்கள் வந்தோமய்யா - தள்ளாடி

இருமுடியை கட்டிக்கிட்டு இன்பமாக பாடிக்கிட்டு
ஈசன் மகனே உந்தன் இருப்பிடத்தை தேடிக்கிட்டு
பேட்டைகளும் துள்ளிக்கிட்டு கோஷங்களும் போட்டுக்கிட்டு
வேடிக்கையாக நாங்கள் ஆட்டங்களும் ஆடிக்கிட்டு
வந்தோமய்யா - தள்ளாடி
(சாமியே திந்தகத்தோம் ஐயப்ப திந்தகத்தோம்)

காணாத காட்சியெல்லாம் கண்குளிர கண்டுகிட்டு
காடு மலைகளெல்லாம் கால்நடையாய் தாண்டிகிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பையிலே குளித்துகிட்டு பாவமெல்லாம் போக்கிகிட்டு
பக்தரெல்லாம் கூடி நின்று பஜனைகள் பாடிகிட்டு வந்தோமய்யா
(சாமியே ஐயப்போ ஐயப்போ சாமியே) - தள்ளாடி

நீலிமலை ஏற்றத்திலே நின்று நின்று ஏறிகிட்டு
நெஞ்சம் உருகி உன்னை நினைச்சுமே பார்த்துகிட்டு
- தள்ளாடி

படியேறி போகும்போது பாங்காக காய் உடைத்து
பாலகனான உன்னை பார்த்து பார்த்து சொக்கிகிட்டு
நெய்யாலே குளிக்கும் போது நேரிலேயே பார்த்துகிட்டு
ஐயப்பா சரணம் என்று பாடிநாங்க வந்தோமய்யா - தள்ளாடி

## கருப்பாண்டி பாடல்

புல்லுகாடென்னும் ஊரிலே கருப்பன் என்னும் பெயரிலே
கருணையுள்ள எந்தன் தெய்வம் காத்து ஆட்சி புரியுதே
காத்து ஆட்சி புரியுதே (புல்லு)

ஐயப்பனின் தாசரே மனக்கவலைகள் தீருமே
குலதெய்வம் கருப்பனே காப்பது உந்தன் பாரமே
காப்பதுந்தன் பாரமே (புல்லு)

புனுகுதனை வாங்குவோம் புருவங்களில் சாத்துவோம்
கண்மலர்களைச் சாத்துவோம் காப்பதுந்தன் பாரமே
காப்பதுந்தன் பாரமே (புல்லு)

அவல்கடலை வைத்துமே பூஜை நாங்கள் செய்குவோம்
கருப்பட்டி எள் வைத்தோமே காப்பதுந்தன் பாரமே
காப்பதுந்தன் பாரமே (புல்லு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து எட்டு படிகளுக்கும் காவல் நீ அல்லவா
கோடாங்கி கருப்பனே காப்பதுந்தன் பாரமே
காப்பதுந்தன் பாரமே (புல்லு)

இன்பம் வாழ்வில் சேரவே இன்னல் யளவுந்தீரவே
மலைக்குச்சென்று திரும்பவே காவல் நீ அல்லவா
காவல் நீ அல்லவா (புல்லு)

## கருப்பன் வாரான்

கருப்பன் வாரான் எங்கள் கருப்பசாமி
கருத்தமேகம் போல வாரான் கருப்பசாமி
முன்கொண்டைக்கரன் வாரான் கருப்பசாமி
முன்கோபக்காரன் வாரான் கருப்பசாமி (கருப்பன்)

சாய்ந்த கொண்டைக்காரன் வாரான் கருப்பசாமி
சபரிமலை சாஸ்தா காவல் கருப்பசாமி
பம்பை பாலன் காவல்காரன் கருப்பசாமி
பதினெட்டாம்படி காவல் கருப்பசாமி (கருப்பன்)

நெற்றியிலே சந்தனப்பொட்டு கருப்பசாமி
நீல மேக சியாமள தேகன் கருப்பசாமி
மலையாள தேசம் விட்டு கருப்பசாமி
மாடன் மாடத்தியுடன் கருப்பசாமி (கருப்பன்)

சல்லடம் கச்சைகட்டி கருப்பசாமி
சாய்ந்த கொண்டைக்காரன் வாரான் கருப்பாசாமி
மீசை முருக்கிவாரான் கருப்பசாமி முச்சந்தியில்
நடந்து வாரான் (கருப்பன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்த முடிச்சடையழகன் கருப்பசாமி
கருங்கச்சை கட்டிவரான் கருப்பசாமி
தூக்கி வைக்கும் கால்களுக்கு கருப்பசாமி
துத்திப்பூ சல்லடமாம் கருப்பசாமி (கருப்பன்)

மாற்றிவைக்கும் கால்களுக்கு கருப்பசாமி
மாதுளம்பூ சல்லடமாம் கருப்பசாமி
நீட்டியாடும் கால்களுக்கு கருப்பசாமி
நெரிஞ்சிப்பூ சல்லடமாம் கருப்பசாமி (கருப்பன்)

அண்ணன் வாரான் தம்பி வாரான் கருப்பசாமி
மண்ணதிர விண்ணதிர கருப்பசாமி
பந்தம் பிடித்து வாரான் கருப்பசாமி
பரிவேட்டை ஆடிவாரான் கருப்பசாமி (கருப்பன்)

## 18 படிப்பாடல்

01. ஒன்னாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
ஓங்காரப் பொருளே சுவாமி பொன் ஐயப்பா

02. இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
இளையவர் மைந்தா சுவாமி பொன் ஐயப்பா

03. மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
முக்கண்ணன் மைந்தாசுவாமி பொன் ஐயப்பா

04. நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
நாராயணன் மைந்தா சுவாமி பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 05. | ஐந்தாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | ஐங்கரர் கிளையவர் சுவாமி | பொன் ஐயப்பா |
| 06. | ஆறாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | ஆறுமுகன் தம்பியே சுவாமி | பொன் ஐயப்பா |
| 07. | ஏழாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | ஏழைப் பங்காளா சுவாமி | பொன் ஐயப்பா |
| 08. | எட்டாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | அஷ்டலெட்சுமி மைந்தனேசுவாமி | பொன் ஐயப்பா |
| 09. | ஒன்பதாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | ஒப்பில்லா மணியே சுவாமி | பொன் ஐயப்பா |
| 10. | பத்தாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | பத்மநாத பாலா சுவாமி | பொன் ஐயப்பா |
| 11. | பதினோறாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | பம்பையின் பாலா சுவாமி | பொன் ஐயப்பா |
| 12. | பன்னிரெண்டாம் திருப்படிசரணம் | பொன் ஐயப்பா |
| | பந்தரை காப்பாய் சுவாமி | பொன் ஐயப்பா |
| 13. | பதிமூன்றாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | பாண்டிய குலத்தாய் சுவாமி | பொன் ஐயப்பா |
| 14. | பதினாலாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | பகவதி பாலா சுவாமி | பொன் ஐயப்பா |
| 15. | பதினைந்தாம் திருப்படி சரணம் | பொன் ஐயப்பா |
| | பரந்தாமன் புதல்வா சுவாமி | பொன் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
பதினாறும் அருள்வாய் சுவாமி பொன் ஐயப்பா

17. பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
பந்தள வேந்தே சுவாமி பொன் ஐயப்பா

18. பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
பரமசிவன் புத்திரனே சுவாமி பொன் ஐயப்பா

படிபதினெட்டும் சரணம் பொன்னையப்பா
சுவாமி பொன்னையப்பா
ஐயப்பனே பொன்னையப்பா
சுவாமியே சரணம் சரணம் பொன்னையப்பா

# ஸ்ரீ ஐயப்பன் புதிய பாடல்கள்

**பூவை செங்குட்டுவன் டி.எல்.மகாராஜன்**

சரணம் சரணம் சரணம் சரணம் சரணம்
சரணம் சரணம் சரணம் சரணம்
சரணம் சரணம் சரணம் சரணம்

படிப்படியாக உயர்த்தும்படி
ஐயன் பாதபடி பதினெட்டு படி
வணங்கிடும் பக்கதர்கள் நினைத்தபடி
வாழ்க்கை அமைந்திடும் நல்லபடி
நல்லபடி நல்லபடி நல்லபடி
படிப்படியாக உயர்த்தும் படி (சரணம்)

கார்த்திகை விரதம் ஏற்றபடி
ஐயன் கருணையில் மந்திரம் சொன்னபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடி ஏந்திட சொல்லும் படி
ஐயன் திருவடி காண அழைக்கும் படி
ஐயன் திருவடி காண அழைக்கும் படி
அழைக்கும் படி அழைக்கும் படி அழைக்கும் படி
படிப்படியாக உயர்த்தும்படி (சரணம்)

தருமம் உலகில் நிலைக்கும் படி.....
தர்ம சாஸ்தா நிலையாய் அமர்ந்த படி
ஆலய வாசல் திறந்த படி
அருள் வாரி வழங்கும் சிறந்த படி
சிறந்த படி சிறந்த படி சிறந்த படி
படிப்படியாக உயர்த்தும்படி (சரணம்)

சரணம்! சரணம்! என்ற படி - தன்
சன்னதி வரும் பணி செய்யும் படி
அரியும் சிவனையும் சேர்த்தபடி
அரிஹரனை உலகிற்கு தந்த படி...
தந்த படி! தந்த படி! தந்த படி!
ஸ்வாமியே சரணம் சரணம் ஐயப்பா (படி)

---

**சண்முகம்** **ஜானகி**

---

ஒரு மண்டலம் நோன்பிருந்தோம்
உன்னையே நினைத்திருந்தோம்
குருசாமி துணை கொண்டோம்
கோவிலை நாடி வந்தோம் ஆ ஆ ஆ...
சரணம் ஐயப்பா ஸவாமி சரணம் ஐயப்பா

எரிமேலி வந்தடைந்தோம்
எல்லோரும் கூடி நின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமேனி காண்பதற்கே
தேடியே ஓடி வந்தோம்
சரணம் ஐயப்பா ஸ்வாமி சரணம் ஐயப்பா

வேட்கை துள்ளல் ஆட்டம் கண்டோம்
பிரயாசித்தம் செய்து கொண்டோம்
வேட்டையாடும் வீரம் கண்டோம்
கோட்டை வாசல் புகுந்துவிடடோம் (சரணம்)

அலசா நதியினிலே அழுக்கை கழுவிவிட்டோம்
ஐயப்பன் பெயரைச் செல்லி
அழுத மேடும் கடந்து விட்டோம்
கல் எடுத்து போட்டு விட்டு - கரி
மலையும் தாண்டி விட்டோம்
எல்லையில்லா பேரொளியை - எதிர்
நோக்கி வேண்டி வந்தோம் (சரணம்)

கனக ஜோதி காண்பதற்கே
கற்பூரம் ஏற்றி வைத்தோம்
பதினெட்டு படி கடந்தும்
பாதமலர் கண்டு கொள்வோம் (சரணம்)

---

**கண்ணதாசன்** **பி.சுசீலா**

---

சைவம் வைணவம் ஒன்று திரண்டு
தவம் புரியும் இடம் சபரிமலை
தவறி விழுந்த மனிதரை எல்லாம்
தழுவிக் கொள்வது சபரிமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுதநிலை என பாதம் இரண்டில்
ஐயன் இருப்பது சபரிமலை
அழகிய கால்களில் முத்திரை இட்டு
அருள்தர நிற்பது சபரிமலை

மதகரை புலிகள் விலங்குகள் யாவும்
மயங்கி கிடப்பது சபரிமலை - மானிடர்
தமக்கு ஓர் இடம் வந்தால் - நான்
என வருவது சபரிமலை

மருத்துவ முறையில் பக்தியை இன்று
திருத்தி அமைத்தது சபரிமலை
மதங்கள் ஜாதிகள் சங்கமமாயி
மனிதனை கடப்பது சபரிமலை

அவன் அருள் தேடி..... முனிவர் நடந்தது
பனிமயமான இமயமலை
மகன் அருள் தேடி மனிதர் நடப்பது
ஒளிமயமான சபரிமலை

சென்றவர்க்கெல்லாம் ஐயன் இருந்து
திருவருள் தருவது சபரிமலை
சென்றவர் தம்மை கண்டவருக்கும்
திருவருள் தருவது சபரிமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே.சோமு** **கே.வீரமணி**

ஸ்வாமியே....ஐயப்பா..... சரணம் ஐயப்பா
சாமி துந்தகத்தோம் ஐயப்பன் துந்தகத்தோம்
எரிமேலி பேட்டை துள்ளி
இன்பமுடன் ஆடிப்பாடி
அருள் மணக்கும் சபரிமலை வந்தோம் ஐயப்பா
உன் திருவடியை வேண்டி
இருமுடியை தாங்கி
அருள் மணக்கும் சபரிமலை
வந்தோம் ஐயப்பா - மகர
திருவிளக்கு காணவந்தோம் சரணம் ஐயப்பா
ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
கரிமலையின் ஏற்றத்திலே ஏறிடும் போது
கருத்துடனே ஏற்றிடுவாய் சரணம் ஐயப்பா
கரிமலையின் இறக்கத்திலே இறங்கிடும் போது
உன் கருணையினால் இறங்கிடுவோம்
சரணம் ஐயப்பா........ ஐயப்பா.

பம்பா நதி தீர்த்தத்திலே நீராடுவோம்
மணிகண்டா உன் புகழை கொண்டாடுவோம்
பம்பா நதி கணபதியை வணங்கிடுவோம்
அவரை நம்பி நீலிமலை ஏறத் தொடங்கிடுவோம்
நீலி மலை ஏறி நாங்கள் நடந்திடும்போது
சிறு பாலகனாய் துணைவருவாய் சரணம் ஐயப்பா
நீலகண்டன் திருமகனே சரணம் ஐயப்பா
நீலவண்ணன் அரிமகனே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டாம்படி கடந்து பகவானே உனைநினைத்து
பாதமலர் பணிந்து நின்றோம் ஐயப்பா
உன் திருவடியை வேண்டி
இருமுடியை தாங்கி அருள் மணக்கும்
சபரிமலை வந்தோம் ஐயப்பா
காந்தமலை ஜோதி கண்டோம் சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

**தவசீலன்** **எம்.எல்.வசந்தகுமாரி**

கண்கண்ட தெய்வம் கலியுக தெய்வம்....
இந்த மண் உலகில் அவதரித்த
மணிகண்ட தெய்வம்...

பாவங்களை தீர்த்துவிடும் பம்பாநதி
பயபக்தியோடு தீர்த்தமாட பெறும்நதி
அச்சமெல்லாம் நீக்கி விடும்

அச்சன் கோவில் அது - அது
அடியவர்க்கு துணிவு தரும் ஐயன் கோவில்
ஐயன் கோவில் - கண்கண்ட தெய்வம்

துன்பம் இருள் போக்குவது மகரவிளக்கு
என்றும் தூய பக்தி கொண்டவர்க்கு
ஐயம் எதற்கு - ஐயப்பா

சரணம் என்று வணங்கிடும் போது
அந்த ஹரிஹரசுத திருவடியே
வாழ்வளிக்கும் நமக்கு (கண்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்பனாதாசன்** **பாலசுப்பிரமணியம்**

பம்பாநதி தீர்த்தத்திலே பக்தரெல்லாம் பாடுகிறார்
பலவேறு ஜாதி ஜனம் பாராமல் கூடுகிறார்
மாலை போட்ட நாள் முதலாய் காலை மாலை
ஸ்நாமப்பா - ஆசையோடு நேரம் வந்தால்
தேடிவரும் ஞானமப்பா

நூறு நூறு பிரம்மச்சரிய நோன்பு
நோக்க வேணுமப்பா ஐயப்பா
நெஞ்சமெல்லாம் பக்தியிலே
நினைவெல்லாம் முக்தியிலே சரணம் ஐயப்பா (பம்பா)

இரு முடியை சுமந்து வந்து ஈசனிடம் அபயமப்பா
நெய்யுடன் தேங்காய் கொண்டு
பரமனிடம் சரணமப்பா
மும்மூலத்தை மீட்டுகின்ற முயற்சி
எங்கள் பயணமப்பா
நெஞ்சமெல்லாம் பக்தியிலே ஐயப்பா
நினைவெல்லாம் முக்தினிலே ஐயப்பா (சரணம்)

**சண்முகம்** **ஜானகி**

அதோ தெரியிது பதினெட்டு படிகள் ஆ....ஆ....
அதோ தெரியிது பதினெட்டு படிகள்
ஐயப்ப சுவாமியின் அருள் திருவடிகள்
அறிந்தோ அன்றியோ செய்திட்ட பிழைகள்
அனைத்தையும் மன்னிக்கும் அவன் மலர்விழிகள் (அதோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதா சஞ்சலம் கொண்ட நெஞ்சிற்கு மருந்து
சுவாமியே சரணம் நாவிற்கு விருந்து
எது வந்தால் என்ன எனச் சொல்லி பொருந்து
இருமுடி சுமந்து அமுதத்தை அருந்து
ஒரே உறுதிகொள் மலைகளில் ஏறு
ஒரு நினைவாக அவன் புகழ் பாடு
மகர ஜோதியும் சுழலுது பாரு
சபரி மகிமையை அனைவருக்கும் கூறு (அதோ)

**கல்பனாதாசன்** **பாலசுப்ரமணியம்**

ஐயப்பன் நாமம் அபயம் அபயம் என்றால்
ஆடாத மனமும் உண்டோ
ஹரிகரன் பாதம் சரணம் சரணம் என்றால்
பாடாத இதயம் உண்டோ (ஐயப்பன்)

சர்வலோக நாயகனே சரணம் ஐயப்பா
சபரிமலை ஆண்டவனே சரணம் ஐயப்பா
போகியுடன் வேதனைகள் போக்கும் ஐயப்பா
சர்வ சாந்தி தீபம் தந்தால் சாந்தி ஐயப்பா
அபயம் அபயம் ஐயப்பா
சரணம் சரணம் ஐயப்பா (ஐயப்பன்)

கரிமலையில் ஏறுவதால் இதயம் இறங்கும்
பம்பை நதி போஜனத்தால் தேகம் சுருங்கும்
பதினெட்டாம் படிஏறி பக்தி விளங்கும்
அபிஷேகம் செய்து வைத்தால்
தோஷம் அடங்கும் (சரணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூவை செங்குட்டுவன்** **எம்.எல்.வசந்தகுமாரி**

சரணம் என்பதே... பக்தியின் நாதம்
அதை பாடும் உள்ளத்தை காக்கும் ஐயப்பன் பாதம்
இருள் நிறைந்த பாதையிலே
ஒளியானதே சரணம்
சரணம் சரணம் சரணம் சரணம்

ஏங்குகின்ற நெஞ்சமெங்கும் அருளானதே சரணம்
சரணம் சரணம் சரணம் சரணம்
சபரிமலை யாத்திரைக்கு வழித் துணையே சரணம்
அவன் சந்நிதியில் ஓதுகின்ற மந்திரமே சரணம்
சரணம் சரணம் சரணம் சரணம்

மலை ஏறிவருவோர்க்கு மழையாலே அருளை
பொழிவதுதான் மணிகண்டன் அவதார மகிமை
தஞ்சமென்று அவனிடத்தில் தந்துவிடு மனதை
அவன் தாமரைப்பூ பாதம் காட்டிடும் வழியை
சரணம் சரணம் சரணம் சரணம்

ஜாதி பேதம் ஏதுமில்லை சபரிநாதன் மலையில்
சரணம் சரணம் சரணம் சரணம்
சத்தியமே துதிக்கும் சாஸ்தாவின் வடிவில்
சரணம் சரணம் சரணம் சரணம்

சரணம் பாடி உலகமெல்லாம் அவனடியில் கூடும்
அவன் சந்நிதியின் அருள் பெறவே
பக்தி மனம் போதும்
சரணம் சரணம் சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணதாசன்** **பி. சுசிலா**

பம்பா நதியில் ஆடுங்கள்
உங்கள் பாவம் கழிவதை பாருங்கள்
இப்புவி தன்னில் மறுபடி பிறக்கும்
அவலம் தன்னை தீருங்கள்

பம்பா நதியினில் நீராடுங்கள்
கரிமலை மீது ஏறி நடந்தால்
கால்கள் கூட கவி எழுதும்
இருமுடி தூக்கி பழகிய தலைகள்
எந்த சுமையையும் தாங்கி விடும்

பம்பா நதியினில் நீராடுங்கள்
புலியில் அமர்ந்த மனிதனைக் கண்டால்
பூதம் ஐந்தும் அடங்கிவிடும்
பூமியை துறந்து சாமியைக் கண்டால்
பொங்கும் துயரம் மறைந்து விடும்
பம்பா நதியினில் நீராடுங்கள்

மகிஷியைக் கொன்ற மன்னனைக் கண்டால்
மனப்பேய் கூட இறங்கி விடும்
வருஷம் பதினெட்டு மலைமேல் நடந்தால்
சொர்கத்தின் வாசல் திறந்து விடும்
ஸ்வாமியே சரணம் ஐயப்பா!
ஸ்வாமியே சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோமு கே.வீரமணி

அம்பலத்தரசன் பந்தளக்குமரன்
அம்புஜக் கண்ணன் ஐயப்பன்
சாஸ்தாவின் புகழ் பாடுவோம்
தர்ம சாஸ்தாவின் புகழ் பாடுவோம்

சங்கம் முழங்கிடும் சபரிமலையிலே
சந்தன வாசன் அமர்ந்திருப்பான்
ஆரியங்காவினில் வீற்றிருப்பான்
சிவ நாராயணன் மகனே
துணை இருப்பான் - பொன் (அம்பல)

குளத்துப் புழையிலே குடி கொண்ட பாலன்
குவலயம் கொண்டாடும் குணசீலன்
நினைத்த உடன்வரும் நீலவண்ணன் பொன்
மணிமாலை அணிந்திடும் மணிகண்டன் பொன் (அம்பல)

அச்சன் கோயிலில் வில்லுடன் அமர்ந்தால்
அன்புடன் நம்மை அழைத்திடுவான்
பார் புகழ் சபரி மாமலைக்கு பரமனின்
மகன் தம்மை அழைத்துச் செல்வான் பொன் (அம்பல)

## தவசீலன் கே.வீரமணி

ஜீவன் என்பது உள்ளவரை - என்
நெஞ்சம் வணங்கும் சபரிமலை
அரிகரன் புகழைப்பாடும் வரை
வாழ்வினில் தோன்றும் சாந்தநிலை (ஜீவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை தோறும் மாலை அணிந்து
நாற்பது நாளும் நோன்பும் இருந்து
நாவில் ஐயன் நாமம் பொழிந்து
நடந்தே சென்று கோவிலையடைந்து
இருமுடி சேர்த்தேன் அவனிடத்தில்
கோடி மணி தந்தான் என்னிடத்தில் (ஜீவன்)

நெய் விளக்காலே அலங்காரம் தன்னில்
நெஞ்சில் மறையும் அகங்காரம்
சரணம் என்னும் ஓங்காரம்.....
ஓங்கார ஸ்வரூபனே... சரணம் ஐயப்போ
சரணம் என்னும் ஓங்காரம்
சர்வமும் அதிலே ரீங்காரம்
ஆசையில் மோதும் அலையாவும்
ஜோதியைக் கண்டால் தெளிவாகும் - மகர
ஜோதியைக் கண்டால் தெளிவாகும் (ஜீவன்)

பம்பை கரையில் அவதரித்தான்
பந்தள நாட்டில் பணி முடித்தான்
மகிஷியை வென்றே வாழ்வளித்தான்
மழலை வடிவில் அருள் கொடுத்தான்
அன்னையின் நோய்க்கும் மருந்தளித்தான்
அகிலம் வாழவும் துணை இருப்பான் - இந்த
அகிலமும் வாழவும் துணை இருப்பான் (ஜீவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தவசீலன்** **கே.வீரமணி**

பம்பை நதிக்கரையே... உந்தன்
பெருமைக்கு இணை இல்லையே...
அரிகரன் திருவருளே நீதான்
அறிந்தாய் முதன் முதலே (பம்பை)

ஆயிரம் கோடி பக்தர்கள் பாடி
தொழுவார் ஐயப்பன் திருவடியில்
அந்த ஐயப்பனே ஒரு குழந்தையின் வடிவில்
அருள் மழை பொழிந்தது உன் மடியில்
அருள் மழை பொழிந்தது உன் மடியில் (பம்பை)

அடைக்கலம் என்று இருமுடி ஏந்தி
அனுதினம் வருவார் கோவிலிலே
அவரவர் மனதில் அருள்வாய் இறங்கி
கருணையை பொழிவான் வாழ்வினிலே
கருணையை பொழிவான் வாழ்வினிலே (பம்பை)

சரணம் பாடி வருவோர்க்கெல்லாம்
சாந்தியைக் கொடுக்கும் சபரிமலை
ஒரு முறை தரிசனம் கண்டால் போதும்
பிறவியின் பயனே தெய்வநிலை
பிறவியின் பயனே தெய்வநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லை அருள்மணி    கே.வீரமணி

சாமியே........... ........... ஐ
சரணம் ஐயப்போ.......
சரண கோஷப்பிரியனே
சரணம் ஐயப்போ.....

சரணம் விளித்தால் மரணம் இல்லை
சாஸ்தா நாமம் அருளின் எல்லை...
தருணம் இதுதான் சரணம் போடு
தர்ம சாஸ்தா பாதம் பாடு

காக்கும் தெய்வம் திருமால் நாமம்
கருணை செய்யும் ஈஸ்வர நாமம்
கலந்து மகிழ்ந்த ஐயன் நாமம்
கூவி வந்தால் புவியில் ஷேமம் (சரணம்)

காடும் மேடும் வீடும் வாசல்
கல்லும் முள்ளும் மல்லிகை மெத்தை
ஆடும் மனத்தை அடக்கி வா வா
ஐயன் மேடை நாடி வா வா (சரணம்)

நெய்போல் உருகும் மனதில் ஐயன்
நேரில் வருவான் நிறையத் தருவான்
குருவை நாடு மாலையைச் சூடு
கோடி ஞான ஜோதியை பாடு
சரணம் சரணம் சரணம் பொன் ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எஸ்.கே.ராஜாமணி** **கே. வீரமணி**

நல்லமுத்து மணியோடு
ஒளி சிந்தும் மாலை
நவரத்தின் ஒளியோடு
சுடர் விடும் மாலை
கற்பூர ஜோதியில் கலந்திடும் மாலை
கனகமணி கண்டனின் துளசி மணி மாலை
ஆயிரம் சரணங்கள் சொல்லிடும் மாலை
ஐயனின் கடைக்கண்ணில்
அன்பெனும் மாலை
அமுதையில் குளித்திடும்
அழகுமணி மாலை
பம்பையில் பாலனின்
பவளமணி மாலை
ஐந்துமலை வாசனின் அழகுமணி மாலை
ஐயப்ப சுவாமியின் அருள் கொஞ்சும் மாலை
ஆனந்த ரூபனின் அன்பென்னும் மாலை
கன்னியின் கழுத்தினில்
அரங்கேறும் மாலை
முத்தோடும் மணியோடும்
முழங்கிடும் மாலை
முக்கண்ணன் மகனான மணிகண்டன் மாலை
கழுத்தோடு உறவாடும் காந்த மணி மாலை
காணவரும் பக்தருக்கு காட்சி தரும் மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கே.சோமு** **கே.வீரமணி**

தரிசனம் கண்டேன் பரவசம் கொண்டேன்
அரிஹரன் மைந்தனை சபரிமலை தன்னில் (தரி)

தர்மத்தை காக்கவே தரணியில் பிறந்தவனை
ஆ..... ஆ...... ஆ.....
கர்மவினை தீர்க்கும் கருணையில் சிறந்தவனை (தரி)

வைத்தாலும் அவர் வாழ வழி காட்டும் மன்னவன்
வாயார வாழ்த்தி நின்றான் வந்தருள் செய்பவன்
மெய்யப்பன் ஐயப்பன் மேன்னை தரும் பாடல்
தையினில் ஜோதியாய் திகழ்ந்திடும் நாதனை (தரி)

ஐந்து மலைக்கரசன் ஐந்தெழுத்தானவன்
ஐங்கரன் தம்பியவன் ஐஸ்வர்யநாயகன்
சிந்தையில் நின்றாடும் பந்தள பாலகன்
சிம்மையன் என்னையன் சுகம் தரும் நாயகனை (தரி)

**கே.சோமு** **கே.வீரமணி**

ஐயப்பா...... சுவாமி ஐயப்பா
சரணம் ஐயப்பா...... சுவாமி ஐயப்பா
காடு மலை கடந்து வந்தோம் ஐயப்பா
உனை காண நாங்கள் ஓடி வந்தோம் ஐயப்பா
மாயவீடுதனை தேடி வந்தோம் ஐயப்பா
சபரி வீடுதனை தேடி வந்தோம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய் அபிஷேகம் பால் அபிஷேகம்
தேன் அபிஷேகம் ஸ்வாமிக்கு
சந்தனம் பன்னீர் அபிஷேகம்
எங்கள் ஐயப்ப சுவாமிக்கு (காடு)

ஏட்டினிலே எழுத வைத்தாய் ஐயப்பா
எங்கள் பாட்டினிலே எழுந்து வந்தாய் ஐயப்பா
நாங்கள் பேட்டை துள்ளி ஆடும் போது ஐயப்பா
நீ ஆட்டமாடி வந்திடுவாய் மெய்யப்பா (காடு)

நீல விழி கண்ணனுக்கும் நீறணிந்த ஈசனுக்கும்
பாலகனாய் அவதரித்த ஐயப்பா
வேலவனின் அருமை தம்பி - காலமெல்லாம்
உன்னை வேண்டி நீலிமலை சபரிமலை
ஏறி வந்தோம் ஐயப்பா (காடு)

மணிகண்டா உன் கருணை அமுதமப்பா
உன் புன்னகையில் புவனமெல்லாம் மயங்குதப்பா
மின்னும் காந்த மலையில் ஜோதி தெரியுதப்பா அப்பா
சபரி மன்னவனே உன்மகிமை புரியுதப்பா (நெய்)

## நெல்லை அருள்மணி **கே.வீரமணி**

பொன்னம்பலம் மேடையிலே....... ஐயப்பா
ஒரு புனித நிலை கனிந்ததப்பா ஐயப்பா...
ஒரு புனித நிலை கனிந்ததப்பா ஐயப்பா... ஐயப்பா
அருள் மணக்கும் ஆண்டவனே ஐயப்பா
ஆதிஞான ஜோதியப்பா ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் வாழ்வை சிறக்கவைக்கும் ஐயப்பா
ஈர்க்கும் காந்தமலையப்பா.....ஐயப்பா (அருள்)

உன் ஒளியை தோற்றுவிக்கும் ஐயப்பா
ஊறிவரும் உணர்வடக்கம் ஐயப்பா
என்னை உன்னுள் நெருங்க வைக்கும்
ஏடநிலை ஏற வைத்தான் ஐயப்பா (அருள்)

ஐம்புலனாம் புலியை வெல்லும் ஐயப்பா
ஐயம் தீர்க்கும் தெய்வம் அப்பா ஐயப்பா
ஒருமை உள்ளம் குடியிருக்கும் ஐயப்பா
ஓங்கும் மலை வேந்தனப்பா ஐயப்பா
ஔவைக்குறள் யோகம் கொண்ட ஐயப்பா
செவ்வேளின் மணிகண்டா ஐயப்பா (அருள்)

**தவசீலன்** **கே.வீரமணி**

சரணம் பாடுவோம்
ஸ்வாமி சரணம் பாடுவோம்
சபரி நாதனை போற்றி
சரணம் பாடுவோம் (சரணம்)

வான் மழை மேகம் வந்து
பூ மழை தூவும்
ஐயன் தாமரை பாதம்
அது தருமத்தின் கூடம் (வான்)

பால் அபிஷேகம்
கண்டால் பாவங்கள் தீரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் நெய் அபிஷேகம்
கண்டால் நிம்மதி சேரும்

மாமலை தோறும் எங்கள்
மணிகண்டன் நாதம்
அவன் தாழ் பணிந்தோம்
நெஞ்சம் தூய்மையில் வாழும்

ஆலய தீபம் நின்று
ஆறுதல் கூறும்
அவன் கோமள ரூபம்
கண்டால் பேரருள் சேரும்

---

## கே.வீரமணி

---

கன்னிமூலை கணபதியை வேண்டிக்கிட்டு - நாங்கள்
கார்த்திகை முதல் தேதி மாலையிட்டோம்
ஐயப்பா ஐயப்பா என்றே சொல்லி - நாங்கள்
ஆறு வாரந்தானே நோன்புமிருந்தோம் (கன்னி)

குருசுவாமி துணைகொண்டு அவர் பாதம் நம்பிகிட்டு
இருமுடியை சுமந்துக்கிட்டு வந்தோமையா
ஆறுபடை வீடுசென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து நாங்க வந்தோமையா (கன்னி)

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமரி வரை
தரிசனமே செய்துவிட்டு வந்தோமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிமேலி பேட்டை துள்ளி வாபரையே வேண்டிகிட்டு
பேரூர் தோட்டில் பொரிபோட்டு வந்தோமையா (கன்னி)

காளைகட்டி அஞ்சல் வந்து அழுதாமலை ஏறிகிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமையா
பம்பையிலே குளிச்சிபுட்டு பாவங்களை துலச்சிபுட்டு
நிலிமலை ஏறி நாங்கள் வந்தோமையா (கன்னி)

பதினெட்டாம் படி தாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூர ஜோதிதனை கண்டோமையா
மகரஜோதிதனைகண்டு மனமார சரணம் போட்டு
மணிகண்டா உன் பெருமை அறிந்தோமையா (கன்னி)

---

சுவாமியே சரணம் ஐயப்பா சரணம்
சுவாமியே சரணம் சரணமையா
சுவாமியே சரணம் ஐயப்பா சரணம்
சுவாமியே சரணம் சரணமையா

O O O

ஒரு : ஸ்வாமியே ஐ
குழு : சரணம் ஐயப்பா
ஒரு : சத்தியமாய் வரும் பதினெட்டாம் படிகளே ஐ
குழு : சரணம் ஐயப்பா
ஒரு : சத்தியமாய் வரும் பதினெட்டாம் படிகளே ஐ
குழு : சரணம் ஐயப்பா

ஒரு : ஒண்ணாம் திருப்படி சரணம் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : இரண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : மூன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : நான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : ஐந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : ஆறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு : ஏழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : எட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : ஒன்பதாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : பத்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : பதினொண்ணாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : பனிரெண்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு : பதிமூணாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : பதிநான்காம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : பதினைந்தாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : பதினாறாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐய்ப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : பதினேழாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா
குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா

ஒரு : பதினெட்டாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
குழு : சாமி பொன் ஐயப்பா
ஒரு : என் ஐயனே பொன் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : சாமி இல்லாதொரு சரணம் இல்லையப்பா
ஒரு : ஸ்வாமி..... ஏ..... ஐ.......
குழு : சரணம் ஐயப்போ

அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்து காத்தருள வேண்டும்.

ஓம் சிவ சத்தியமான பொன்மலை மயில் வாசல் பதினெட்டாம் படிமேல் வாழும் வில்லாளி வீரன் வீரமணி கண்டன் காசி ராமேஸ்வரம் பாண்டி மலையாளம் அடக்கி ஆளும் ஓம் சிவ ஹரிகர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்பா சாமியே ஐயப்பா
குழு : சரணம் ஐயப்போ.......

**கண்ணதாசன் — சௌந்தரராஜன் குழு**

ஸ்வாமி சரணம் சரணம் என் ஐயப்பா
ஸ்வாமி இல்லாதொரு சரணமில்லையப்பா
ஹரிஹரஸுதனே அருள்க என் ஐயப்பா
அடைக்கலம் நீ இன்றி வேறுமில்லையப்பா (ஸ்வாமி)

இருமுடி தாங்கிய தலையொரு கோடி
கோடியுமே உனைத்தேடி - அருள்பெற
திருத்தலம் வந்தோம் பாடி
எரிமேலி தன்னில் ஒரு பேட்டை துள்ளி
ஒரு மக்கள் போல் வந்தோம் ஐயப்பா
ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா - ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா
(ஸ்வாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதை எனும் நதிதனில் தலைமூழ்கி
அங்கிருந்திரண்டுகல் எடுத்து - அதை அந்தக்
கல்லிடும் குன்றினில் விடுத்து
கரிமலை ஏறி ஹரிஹரப்பாடி
வந்தோம் ஆனந்தம் தொடுத்து
ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா - ஐயப்பா ஸ்வாமி - ஐயப்பா
(ஸ்வாமி)

பம்பையில் குடிலிட்டு பஜனைகள் பாடி
பக்தியுடன் உணவருந்தி - அங்கொரு
பம்பா விளக்கினை நகர்த்தி
சபரிபீடம் கண்டு சரங்குத்தி ஆடிட
ஒரு தாயின் மைந்தர்கள் வந்தோம்
ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா - ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா
(ஸ்வாமி)

தை முதல் தேதி திருப்பொங்கல் நாளில்
ஸ்வாமி நின் வாசலைத் தேடி - உனதொரு
பெருமையில் மாந்தர்கள் ஆடி
பதினெட்டுப் படிகண்டு கோவிலில் சென்று
பரவசமானவர் கோடி ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா
ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா (ஸ்வாமி)

---

**கண்ணதாசன் பி.பி.சீனிவாஸ் – சுசிலா**

---

ராஜா : அன்பு வடிவாக நின்றாய் சிவபெருமானே
உன்னை ஆதியின்மூலம் சிவபெருமானே
இன்ப நிலை கொண்டு வந்தாய் சிவபெருமானே
இன்று எங்கள் குலம் வாழவைத்தாய் சிவபெருமானே
பிள்ளை ஒன்று வேண்டி நின்றேன் சிவபெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பிள்ளை வடிவாக வந்தாய் சிவபெருமானே
கள்ளமின்றி பாடுபட்டேன் சிவபெருமானே
நீ கைநிறைய அள்ளித்தந்தாய் சிவபெருமானே

ராணி : கோகுல பாலகனே கண்ண பெருமானே
எங்கள் கோவிந்த நாயகனே கண்ண பெருமானே
கோபியர்லீலை கொண்டாய் கண்ண பெருமானே
- எங்கள்
குடும்பத்தை வாழவைத்தாய் கண்ண பெருமானே
ஒன்றுக்கு இரண்டு தந்தாய் கண்ண பெருமானே
அதில் உன் முகம் காணவைத்தாய் கண்ண
பெருமானே
நன்றி என்று சொல்லுகின்றோம் கண்ண பெருமானே
உன்னை நாள்முழுவதும் பக்தி செய்வோம்
கண்ண பெருமானே

---

**கண்ணதாசன்** **சௌந்தராஜன்**

---

குரூர் ப்ரம்ஹா குரூர்விஷ்ணோ குரூர்தேவோ மகேஸ்வரா
குரு ஸஷாத் பரப்ரம்ஹா தஸ்மை ஸ்ரீகுருவே நமா
கண்ணில் தெரியும் காட்சில் எல்லாம் கடவுள்
இருக்கின்றார் - அவர்
கருணை உள்ளம் இரக்கம் உள்ளவர் மனதில்
இருக்கிறார் - (கண்)
எண்ணும் எழுத்தும் கற்றவர் வாழ்வில்
முன்னே நிற்கின்றார் - அவர்
எழுத்தறியாத மனிதருக்கெல்லாம் எழுத்தாய் நிற்கின்றார்
எழுத்தாய் நிற்கின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகளில்லாதமுடவருக்கெல்லாம் காலாய் வருகின்றார்
- அவர்
கைகாளில்லாத ஊனருக்கெல்லாம் கைகள் தருகிறார்
(கண்ணில்)
வாழத்தெரியா மனிதருக்கெல்லாம் வாழ்வை
அளிக்கின்றார் - அவர்
வாய் பேசாத ஊமைகட்கெல்லாம் வார்த்தைகள்
தருகின்றார்! வார்த்தைகள் தருகின்றார்! (கண்)

சின்னஞ் சிறுவன் வடிவிலிருக்கம் தெய்வம் ஐயப்பா - உன்
செயலில் ஊமையைப் பேசவைத்தாயே அன்பே ஐயப்பா!
இன்னும் பலரை வாழவைப்பாயே எங்கள் ஐயப்பா - நீ
இறைவன் கொடுத்த வரமோ அறியோம் எங்கள் ஐயப்பா!
ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா! ஐயப்பா ஸ்வாமி ஐயப்பா!

---

**கண்ணதாசன்** **பி.சுசிலா**

---

தேடுகின்ற கண்களுக்குள் ஓடி வரும் சுவாமி
திருவிளக்கின் ஒளியினிலே குடியிருக்கும் சுவாமி
வாடுகின்ற ஏழைகளின் வறுமை தீர்க்கும் சுவாமி
வஞ்சமில்லா நல்லவர்க்கு அருள் புரியும் சுவாமி
ஐயப்பசுவாமி அருள்புரி சுவாமி
கண்ணனும் நீ கணபதியும் நீ கந்தனும் நீயே - எங்கள்
காவல் தெய்வம் பரமசிவன் விஷ்ணுவும் நீயே
அண்டமெல்லாம் காத்தருளும் சக்தியும் நீயே - என்மேல்
அன்பு வைத்து நதிவரைக்கும் ஓடி வந்தாயே
ஐயப்பசுவாமி இன்னும் அருள்புரி சுவாமி (தேடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையுண்டு அன்னையுண்டு எந்தன் மனையிலே -ஒரு
தம்பி மட்டும் பிறக்க வேண்டும் உந்தன் வடிவிலே
அன்பு கொண்டு தந்தைக்கவன் செய்யும் பணியிலே - நாங்கள்
ஆண்டுதோறும் வந்து நிற்போம் உந்தன் நிழலிலே
ஐயப்ப சுவாமி இன்னும் அருள்புரி சுவாமி

---

**கண்ணதாசன்** **சௌந்தர்ராஜன்**

---

சபரிமலையில் வண்ண சந்திரோதயம் தர்ம
சாஸ்தாவின் சந்நிதியில் அபிஷேகம்
கோடிக்கண் தேடி வரும் ஐயப்பனை - நாமும்
கும்பிட்டு பாடுகின்றோம் என்னப்பனை (சபரி)

பாலெனச் சொல்வது உடலாகும் - அதில்
தயிரெனக் கண்டதெங்கள் மனமாகும்
வெண்ணெய் திரண்டதுந்தன் அருளாகும் - இந்த
நெய் அபிஷேகம் எங்கள் அன்பாகும்
ஏழு கடல் உனதாட்சிலே வரும் ஐயப்பா - இந்த
ஏழுலகம் உந்தன் காட்சியிலே வரும் ஐயப்பா
ஐயப்பா - நீ தான் மெய்யப்பா
ஐயப்பா - நீ தான் மெய்யப்பா (சபரி)

வாசமுடைய பன்னீர் அபிஷேகம் - எங்கள்
மனதில் எழுந்த அன்பால் அபிஷேகம்
இனிய பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் - அதில்
இன்பத்தை கூட்டுதய்யா உன்தேகம்
ஏழு கடல் உனதாட்சிலே வரும் ஐயப்பா - இந்த
ஏழுலகம் உந்தன் காட்சியிலே வரும் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பா - நீ தான் மெய்யப்பா
ஐயப்பா - நீ தான் மெய்யப்பா (சபரி)

உள்ளத்தின் வெண்மை தன்னை கையிலெடுத்து - அதில்
உன்பெயரைக் குழைத்து நெற்றியிலிட்டு
உருகும் விபூதியினால் அபிஷேகம் - ஹரி
ஓம்மென்று சந்தனத்தில் அபிஷேகம்
ஏழு கடல் உனதாட்சிலே வரும் ஐயப்பா - இந்த
ஏழுலகம் உந்தன காட்சியிலே வரும் ஐயப்பா
ஐயப்பா - நீ தான் மெய்யப்பா
ஐயப்பா - நீ தான் மெய்யப்பா

**கண்ணதாசன்** **சீர்காழி கோவிந்தராஜன் குழு**

தீம் தகத்தோம் தீம் தகத்தோம் ஐயப்பா
தெய்வத்திலே நீ ஒருவன் மெய்யப்பா
தேடினோம் கூடினோம் கருணை செய்யப்பா
தினம் உன்னை நாடினோம் சாமி ஐய்ப்பா (தீம்)

மார்கழியில் நாங்களெல்லாம் பேட்டை துள்ளுவோம்
மலை மீது ஏறி வந்து உன்னைப் பாடுவோம்
வரிசையுடன் பம்பை நதி நீரில் ஆடுவோம்
வாபரெனும் துணைவனையும் வணங்கக் கூடுவோம்
மனதில் எமக்கு இடம் கொடுத்து உதவி செய்யப்பா
மகர விளக்கைக் காண வேண்டும் சாமி ஐயப்பா
சாமி தீம்கத்தோம் - தோம் ஐயப்பா தீம்தகத்தோம் - (சாமி)

சாமியே ஐயப்போ சாமியே ஐயப்போ
கடலும் வானும் உன்னாலே காற்றும் மழையும் உன்னாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலின் உறுதி உன்னாலே உள்ளம் செழிப்பதும் உன்னாலே
கன்னிபுரத்து மாதேவி காவலிருப்பதும் உன்னாலே
கார்த்திகை மாதம் வந்தாலே பாரதம் மழுவதும் உன்னோடே
வாக்கும் வலிமையும் நீயப்பா வாழ்வைத் தருவாய் ஐயப்பா
வீரமும் செல்வமும் நீயப்பா வெற்றியைத் தருவாய் ஐயப்பா
சாமி தீம்தகத்தோம் - தோம் ஐயப்பா தீம்தகத்தோம் - (சாமி)
சாமியே சரணம் ஐயப்பா

**தசரதன்** **ஜேசுதாஸ்**

பொன்னின்றி மெய்யோடு நெய் கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் - சபரியில்
ஐயனை நீ காணலாம் - சபரியில்

ஐயப்பா சுவாமி ஐயப்பா
ஐயப்பா சுவாமி ஐயப்பா

அவனை நாட அவன் புகழ் பாடு
புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்
உன்னை புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன்
இருப்பது காடு வணங்குவது நாடு
அவனைக் காண தேவை பண்பாடு

ஐயப்பா சுவாமி ஐயப்பா
ஐயப்பா சுவாமி ஐயப்பா

பூஜைகள் போடு தூய அன்போடு
பெயரோடு வாழவைப்பான் ஐயப்பன்
நல்ல பெயரோடு வாழவைப்பான் ஐயப்பன்
அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் வேண்டும் அன்பரையெல்லாம் வாழவைப்பான்
அருள் வேண்டும் அன்பரையெல்லாம் வாழவைப்பான்

ஐயப்பா சுவாமி ஐயப்பா
ஐயப்பா சரணம் ஐயப்பா (பொன்)

---

**புலவர்மாரி** **பாலசுப்பிரமணியம், ராஜ•**

---

சொன்னால் இனிக்குது
சுகமாய் இருக்குது
பொன்னாய் மணியாய்
உன்முகம் ஜொலிக்குது
ஹரி ஹர புத்திர அவதாரமே
அதிகாலை கேட்கின்ற பூபாளமே
அணுவுக்குள் அணுவாக ஆதாரமே
நான் அன்றாடம் படிக்கின்ற தேவாரமே (சொன்)

வேதத்தின் விதையாக விழுந்தவனே
வீரத்தின் கணையாக பிறந்தவனே
பேதத்தை போராடி அழித்தவனே
ஞான வேதாந்த பொருளாக திகழ்பவனே (சொன்)

வில்லுடன் அன்புடன் வேங்கை புலியுடன்
போர்க்களம் புகுந்தவனே
சொல்லி முடித்திடும் முன் வரும் பகையை
கிள்ளி எறிபவனே
அள்ளி எடுத்து அருள் தருபவனே
அன்பே வடிவாய் இருப்பவனே
ஏ.........ஏ........ஏ.......நின் புகழை (சொன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடாகம் இளமுருகு — டி.எல். மகராஜன்

அருள் மணக்குது சபரிமலையின் உச்சியிலே
ஐயன் அழகு சந்தன மணம்
அடிக்குது நெத்தியிலே... ஆடிவரும்
கோடி ஜனம் பம்பையிலே
அவன் அமர்ந்தகோலம்
நெறைஞ்சிருக்குது நெஞ்சினிலே (அருள்)

பொருள் மணக்குது பாட்டிலே
புகழ் மணக்குது ஏட்டிலே
புனித தெய்வம் கொலுவிருக்குது
புலிகள் வாழும் காட்டிலே (பொருள்)

மலர்கள் கோடி காவிலே
மகிமை கோடி நாவிலே
மனம் எல்லாம் தூய்மை பெறும்
மகர ஜோதி ஒளியிலே (அருள்)

கன்னி மூலகணபதி கருப்பனாறு சந்நிதி
கரிவலம் போல் அமுத பம்பை கரை கடக்கும்
மாநதி விண்ணை முட்டும் திருமுடி
கண்ணில் எங்கும் இருமுடி
கேட்பவர்க்கு கேட்கும் வரம்தந்தருளும் குணாநிதி (அருள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்ணதாசன்** **வீரமணி – குழு**

மலைமீது மணியோசை ஐயப்பா
மழைபோல ஜனவெள்ளம் ஐயப்பா
அலை தானோ தலை தானோ ஐயப்பா
அடியார்க்கு அருள்கோடி செய்யப்பா
தொடங்கிடும் பேட்டையில் புது எண்ணமே
தொடர்கின்ற மனமெங்கும் உன் வண்ணமே
திருப்பேரூர் தோடென்னும் ஆற்றிலே - கால்
நடை போட்டுப் பொரி போடும் கூட்டமே...

அழுதையில் நீராடிச் செல்கின்றவர்
அழுதேற்றம் மலைமீது கல் கொண்டவர்
கல்லிடும் குன்றத்தில் இடுகின்றவர்
கரிமலை அருள் தன்னில் காண்கின்றவர்
பம்பையில் ஆடியும் தீபம் நகர்த்தியும்
பக்தி கொண்டாடிடுவார் - திருப்
பரம்பொருள் கணபதி தன்னை வணங்கி
சக்தியும் கொண்டிடுவார்
நீலிமலை தனில் ஏறி நடந்து
சபரியை நெருங்கிடுவார் அங்கு
நிலை பெறும் பீடம் சபரியைக் கண்டு
சரங்குத்தி வணங்கிடுவார்
பதினெட்டுப் படியிலும் பூஜை நடத்தும்
பரவசமானார் தம்மை மறந்தார்
ஐயா எனை நாடி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பெரும் ஜோதி மிகப்பெரும் கருணை
ஆனந்த ஒளி வீசும் - தினம்
அங்கே தெரியும் ஜோதியைக் கண்டால்
ஆதவன் திருக்கோலம்
சாமியே சரணம் பொன் ஐயப்பா
சரணம் ஐயப்பா
சாமியே சரணம் பொன் ஐயப்பா
சரணம் ஐயப்பா

## மணக்கும் ஐயப்பன்

சந்தனமாம் சந்தனம் சபரிமலை சந்தனம்
சந்தனத்தை வச்சிக்கிட்டு சபரிமலையை நாடுங்கோ

குங்குமமாம் குங்குமம் குளத்துபுழை குங்குமம்
குங்குமத்தை வச்சிக்கிட்டு குளத்துபுழையை நாடுங்கோ

அத்தருன்னா அத்தரு அச்சன்கோயில் அத்தரு
அத்தரை தெளிச்சிக்கிட்டு அச்சன்கோயில் நாடுங்கோ

பன்னீராம் பன்னீர் பந்தளத்து பன்னீர்
பன்னீரை தெளிச்சிக்கிட்டு பந்தளத்தை நாடுங்கோ

பேட்டையின்னா பேட்டை எரிமேலி பேட்டை
பேட்டைதுள்ளல் செய்வதற்கு எரிமேலி வாருங்கோ

கற்பூரமாம் கற்பூரம் காந்தமலை கற்பூரம்
கற்பூரத்தை ஏந்திக்கிட்டு காந்தமலையை நாடுங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னதியாம் சன்னதி ஐயப்பன் சன்னதி
ஐயப்பனை காண்பதற்கு சபரிமலைக்கு வாருங்கோ

## K.J.ஜேசுதாஸ் பாடிய பக்திப் பாடல்கள்

சுப்பிரபாதம் சுவாமி பள்ளி எழுந்தருள்வாய்
சத்யமாம் பொன்னின் பதினெட்டாம் படியின் தத்துவமே
சத்யமாம் பொன்னின் பதினெட்டாம் படியின் தத்துவமே
சின்மய ரூப சிகாமணியே
சத்யமாம் பொன்னின் பதினெட்டாம் படியின் தத்துவமே
சின்மய ரூப சிகாமணியே
அத்யான மகற்றும் மெய்ஞானமே (சுப்ர)

அஷ்டதிக் பாலகர் ஊதிய சங்கு நாதம்
ஐயனின் பள்ளியுணர்த்திடவே
அஷ்டதிக் பாலகர் ஊதிய சங்கு நாதம்
ஐயனின் பள்ளியுணர்த்திடவே
ஆகாச சங்கருடன் பூபாளம்
தேனோடு மலரும் பன்னீரும் நல்கி சுவாமி
அடியனின் மனசாம் கடலிலே திரைகள்
அய்யனின் பாதத்தில் அர்ச்சித்தேன்
புனுகு சவ்வாது சந்தனம் நெய்வேத்யம் (சுப்ர)

இந்திராதி தேவர்கள் நட்சத்திர பூக்களால்
பொற்பாதம் மீதினில் அர்ச்சனையும்
இந்திராதி தேவர்கள் நட்சத்திர பூக்களால்
பொற்பாதம் மீதினில் அர்ச்சனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோகம் தன் கையில் செந்தாமரை
நானொரு இதழாய் மணமாவேன் சுவாமி
அடியனின் கண்களில் ஆனந்த நீர்துளிகள்
அய்யனுக்கு ருத்திராட்சமானும்
பொன் ஐயப்பன் என் இதயக் கோயிலிலே (சத்ய)

கருணையோடு அணைக்கின்ற கையேது - கொடும்
காட்டில் நமை வழிகாட்டும் பொருளேது (கருணை)

பம்பையாற்றில் புனிதமான குளிரேது - நமை
பாட்டுபாடி தாலாட்டும் அன்னை ஏது
ஐயப்பன் சுவாமி ஐயப்பன் (ஐயப் (கருணை)

பந்தளத்தில் பெருமை சேர்த்த புண்யமேது - நோன்பால்
பக்தரை சுவாமியாக்கும் உருவமேது (பந்தளத்)
சம்சாரக் கடலினிலே தோணியேது (சம்சார)
பாவ சுவடுகளைச் சுட்டெரிக்கும் அக்னியேது
ஐயப்பன் சுவாமி ஐயப்பன் (ஐயப் (கருணை)

ஜாதிமத பேதமில்லா சமத்துவ தீபம் - காட்டி
மனிதர்களை புனிதராக்கும் மகர தீபம் (ஜாதி)

சைவ வைஷ்ணவங்கள் ஒன்றாய் இணைந்து சேர்க்கும்
மகா சன்னிதானம் சானித்ய மனதில் சேர்க்கும்
ஐயப்பன் சுவாமி ஐயப்பன் (ஐயப் (கருணை)

○ ○ ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிவோடு நமை இழுக்கும் காந்தமலை
மணிகண்டன் வாழும் உயர்ந்தமலை சபரிமலை (கனி)

ஓங்கார நாதமெனும் வேதமலை - அன்பர்
ஒற்றுமையாய் நாமம் சொல்லும் தெய்வமலை (கனி)

தேவேந்திரன் புலியாக தேவர்களும் கூடவர
தெய்வமகன் பவனிவந்த சபரிமலை
தேவேந்திரன் புலியாக தேவர்களும் கூடவர
தெய்வமகன் பவனிவந்த சபரிமலை
கண்ணில்லார்க்கு கண்கொடுக்கும் சாந்திமலை
பேசாத பிள்ளைகளை பேசவைக்கும் தெய்வமலை(கனி)

காத்திருந்தாள் பக்தசபரி கானகத்தில் ஆவலாக
பொன்மாமலை ஹரிஹரசுதன் தனக்கு மோட்சம் நல்கிட
காத்திருந்தாள் பக்தசபரி கானகத்தில் ஆவலாக
பொன்மாமலை ஹரிஹரசுதன் தனக்கு மோட்சம் நல்கிட
ஜோதியாகி சபரி மோட்சம் தந்த தெய்வம்
சொன்னான் தான் வாழும் புனிதத்தலம் சபரிமலை (கனி)

○ ○ ○

வில்லெடுத்து விளையாடும் தெய்வமே - பக்தர்
இதயமாம் நீலவானில் - மன
வில்லெடுத்த தத்துவம் சொன்னவனே
பலநிறம் சேர்ந்து தான் மனவில்லென்பது
மன ஒற்றுமை ஒன்றுதான் ஜெயமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா (வில்)

உடல் தந்தாய் உயிர் தந்தாய் அறிவும் தந்தாய்
உதவாத ஆணவத்தை ஏனோ தந்தாய்
உடல் தந்தாய் உயிர் தந்தாய் அறிவும் தந்தாய்
உதவாத ஆணவத்தை ஏனோ தந்தாய்
அளவில்லா ஆசைகளை மணிகண்டா நீ
அளவில்லா ஆசைகளை மணிகண்டா நீ -எங்கள்
குறை நீக்கிடு ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா (வில்)

கல்லாகும் சொல்லாலே மனிதரை வாட்டும்
நல்வழி செல்லா மனமும் சினத்தைக் கூட்டும்
இனி உன்னருளாலன்றோ மனிதரின் நிலை
இனி உன்னருளாலன்றோ மனிதரின் நிலை - இங்கு
நீ தீமைகளை கொய்திடுவாய் ஐயா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா
ஐயன் ஐயப்பா சரணம் ஐயப்பா

O O O

மாயே மாயே நீயொரு மாளிகை புரத்தம்மா
இரவும் பகலும் இருமுடியைக் கட்டி
மலைப்பயணம் தொடர்கின்ற பொருளே (மாயே)
மாதவ சீலராம் குருசுவாமிமார் நின்று
மந்திரம் சொல்கின்ற மலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதூத மாருதன் நெஞ்சில் நெருப்போடு
அஷ்டாங்கம் புகைத்தலை நின்றான் (மாயே)
திருமாமலையில் பாதபலம் தரும்
ஐயனின் திருநாம மந்திரம்
இயற்கை நுழையில் வைத்தூதிய
பொன்னிற உதயங்களணிபவளே (மாயே)
மகரவிளக்கொளி சபரிமலையில் நம்
மனசாட்சி உணர்த்தும் ஒளியே
சுவாமி திருப்படி மகத்துவமோ உன்
சாதுபாடகன் பாக்கியமோ (சுவாமி (மாயே)

○ ○ ○

பக்த சபரியின் இதயம் ஒரு
நூறு இதழ்க் கமலம் (பக்த)
அதில் சுவாமியின் நாமங்கள் பல லட்சம் உருவிலும் (அதில்)
சரணமய்யப்பா மந்திரம் - சுவாமி
சரணமய்யப்பா மந்திரம் (பக்த)

மனதால் யாகத்தில் குண்டலியை தீமூட்டி
யாகத்தில் எரிபொருள் முன்வினைகள் (மனதால்)

வேள்வி புகை கரிமலையிலுருவாகி
அய்யன் அருளின் திருஅருளே (வேள்வி)

மகர விளக்கின் ஒளியானது (பக்த)
அன்பு மலரை பக்தி அமுதுடன் ஆண்டவன்
முன்னில் நான் படைக்க (அன்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய தாமரை மீதினிலே ஐயன்
ஐயப்பன் அமர்ந்திடுவான் (இதய)
ஒளி பிரணவ மணி நாதம் (பக்தி)

பூத நாயகன் ஐயப்பா
பூமி அரசாலும் மெய்யப்பன் (பூத)

வேதாந்த பால யோகியவன் - உயர்
வெற்றிகளை தந்திடவே வந்தப்பன்
வேதாந்த பால யோகியவன் உயர்
வெற்றிகளை தந்திடவே வந்தப்பன் (பூத)

பஞ்சகல நாயகன் பக்தரக்கனுகூலன்
நெஞ்சார நினைப்போருக்கு நேசனவன்
பஞ்சகல நாயகன் பக்தரக்கனுகூலன்
நெஞ்சார நினைப்போருக்கு நேசனவன்
வஞ்சகரை நல்வழியில் ஆக்குவோன்
மன்மந்தவ புத்திரனவன் தத்வம் நிறை
மாயாமயன் மணிகண்டா நின் திருவடி சரணம்
ஜோதிமய சரணம் சுந்தரனே சரணம்
சத்யம் தரும் அற்புத நிலை சரணம் சரணம் (பூத)

அன்னை சொல் மதித்தவன் அஞ்சாத பாலகன்
வீரனாக புலி மேலே வந்தவன் (அன்னை)

தண்டில் நானொளியை கணவனாக ஆக்குவோன்
சித்தர் சொல் வித்தைகளை நித்தம் பல
பக்தருக்கருள் எந்தன் குருவே நின் திருவடி சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்தி பழம் சரணம் முத்தே அருள் சரணம்
நித்தியாநிதி விளங்கும் படி சரணம் சரணம் (பூத)

O O O

சரங்குத்தி ஆலே நீ சாட்சி - சபரி
பீடமே நீ சாட்சி
தஞ்சம் என்றோர்க்கு தாயினும் சிறந்தவன்
தாரகப் பிரம்மமே ஐயப்பா - சுவாமி ஐயப்பா (சரங்)

சூர்ய வில்லினை தோளில் அணிந்தவன்
தூளியாலே அம்புகள் எய்தும் மனசாம்
கொடுங் காட்டில் வேட்டையாடிட சுவாமி
மணிகண்டன் மகிமை பொன்சரம் தொடுத்தான்
மனசாம் கொடும் காட்டில் வேட்டையாடிட சுவாமி
மணிகண்டன் மகிமை பொன்சரம் தொடுத்தான்
கரிபுரி நரிகளாம் காம குரோதங்களை
பலதிரை எய்து வீற்றிடவே - எந்தன்
விழிகளில் ஐயனின் திருவுருவம் (சரங்)

சந்திரனாம் வட்ட பரிசையணிந்து
சந்தனம் பொட்டு பள்ளி பாலினில் தெளித்து (சந்திர)

கனககேசரிகளாம் வாகனங்களில் ஐயன்
கலியுக காடுதேடி வந்தானே
இடி மின்னல் உருமிகள் துரத்திடும் சுவாமி
இடி மின்னல் உருமிகள் துரத்திடும் சுவாமி - எந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் நெஞ்சில் வேட்டையாடினான்
அன்றே இருள் நீங்கி ஒளிமயமானதே (சரங்)

○ ○ ○

ஆகாசமாம் பள்ளி புலிமேல் பவனியாய்
ரோகாதி மாற்றிடும் சுவாமி (ஆகாச)

கபடமாம் ரூபத்தின் தலைவேதனைக்கவன்
தருமருந்து புலிப்பாலு (ஆகாச)
தரணிக்கு தந்வந்த்ரி ஞானமூர்த்தி (ஆகாச)

அறியாத தீவினை பாவச்சுவடாகி
மனிதரை வாட்டிடும் ஜென்மம்
அறியாத தீவினை பாவச்சுவடாகி
மனிதரை வாட்டிடும் ஜென்மம்
ஐயன் கடைக்கண்ணால் நம்மை காத்திடும்
நல்லவன் பாரோரால் போற்றிடும் ரூபனாம்
ஐயன் கடைக்கண்ணால் நம்மை காத்திடும்
நல்லவன் தீதான ஆணவத்தின் ரூபனாய்
மகிஷி மர்தனன் செய்தான் அன்பு (மகிஷி)

மனிதாபிமானமுள்ள தெய்வம்
சமதர்மத்தின் ரூபமே சரணம் (ஆகாச)

கேட்டு நடுங்கிடும் வன் கோரரூபங்களை
வேட்டையாடி நமை காக்கும் சுவாமி
கேட்டு நடுங்கிடும் வன் கோரரூபங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டையாடி நமை காக்கும் சுவாமி
நவசக்தி மணி வில்லின் நாணொளி கொண்டவன்
நாட்டின் நலம் காக்கும் சுவாமி (நவசக்தி)

சத்ய தர்மமதை குடிவைக்க வந்தவன்
சானித்ய மூர்த்தியே சரணம் (சத்ய)
அருள் நித்திய சொரூபமே சரணம் (ஆகாச)

○ ○ ○

ஆழி பூஜைக்கு கற்பூரம் கொண்டு வரும்
ஆகாய பவனி வரும் மேகங்களே
ஆகம சமத்துவ பிரணவ சொரூபன்
ஆனந்த திண்மயரூபன்
ஐயனின் திருப்பாதம் தொழுதிட வேண்டும் (ஆழி)

அழுதையில் ஐயனை தொழுதால் பின்னே
எரிமேலி வாபரைத் தொழுவாய் (அழுதை)

அம்பலர் குலப்பட்ட ஆலங்காட்டாரின்
ஆவேச பேட்டை துள்ளல் பார்க்க வேண்டும்
அம்பலர் குலப்பட்ட ஆலங்காட்டாரின்
ஆவேச பேட்டை துள்ளல் ஆனந்தமே (ஆழி)

பம்பா தீரத்தில் விரியும் தீர்த்தமும்
பம்ப விளக்குகள் பரவசமே (பம்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னிதானத்தில் பொன்னாதிக்க சந்திரனும்
ஒளி நெய்யால் அபிஷேகம் பார்த்ததுண்டா (சன்னி (ஆழி)

திரு ஆபரண வரவில் குடையாய் கருடண்
வானத்தில் வருவான்
மகர ஜோதியின் மகாதத்துவத்தை
மனதில் பொன்னம்பல மேடு காட்டும் (மகர)
மனதும் பொன்னம்பல மேடாகுமே (ஆழி)

○ ○ ○

சுவாமி என் ஜீவ வீணை - நீ
மீட்டும் நாதம் என் ஜென்ம பாக்யம்
நாவினில் இனித்திடும் கானம்
அற்புத கானம் ஐயப்ப கானம் (சுவாமி)

பிறந்தவன் மனதில் மறதி திரையிட புகுந்தது
அனித்திய பாசங்களே மாய பாசங்களே (பிறந்தவன்)

சங்கமமாகும் ஆத்மாவின் இருப்பிடம்
உன்கோவில் வாசலிலே - தேவா
சங்கமமாகும் ஆத்மாவின் இருப்பிடம்
உன்கோவில் வாசலிலே இறைவா
உன்கோவில் வாசலிலே (சுவாமி)

அலைந்திடும் மனதினை ஒருவழி கூட்டும்
பகவான் இசை ஞான திருக்கோலமே -
சுவாமிதிருக்கோலமே (அலைந்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச பூதங்களை சுருதி லயத்தோடு சேர்க்கும்
மெய் ஞான ராக ரூபா (பஞ்ச)
எல்லாம் நீ மீட்டும் வீணையின் நாதம் (சுவாமி)

○ ○ ○

ஐயனே...... ஐ..... சரணம் ஐயப்பா
ஐயனே...... ஐ..... சரணம் ஐயப்பா
மாலையும் மார்பிலிட்டு நோன்புகள் நோற்று நாங்கள்
மாமலைகள் தாண்டிவருவோம் ஐயனைக் காண்போம்
கன்னிமலை பொன்மலை புண்யமலை சபரிமலை (சபரி)

மணிகண்டன் வாழும் மலை - பக்தர்
பல நாடு விட்டிங்கே பல கோடியாய் சேர்ந்து
சரணம் முழங்கும் மலை - சுவாமி சரணம் முழங்கும்மலை
என் ஐயா பொன் ஐயா என் ஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னி)

கௌரீசன் தன்மகனாம் கலிகால தெய்வமவன்
பம்பா நதிக்கரையில் பிறந்தானே ஐயன் ஐயன்
வேட்டையாடும் மன்னனவன் காட்டினிலே சென்ற நேரம்
கண்டெடுத்து ஐயனை வளர்த்தானே
என் ஐயா பொன் ஐயா என் ஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னி)

வில்லாளி வீரனாகி வீரமணிகண்டனாகி
புலிவாகனனாகி சுவாமி மகிஷிமர்த்தனனாகி
ஏழுமலை தாண்டி ஐயன் சபரிமலை மேலமர்ந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவனை போற்றி நலம் பெறுவோம்
என் ஐயா பொன் ஐயா என் ஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னி)

கன்னிகட்டு நிறைவு செய்தவர்
கரிமலை நீலிமலை கடந்து வருபவர்
பதினெட்டாம் படி ஏறி வருபவர்
சரணம் முழங்கி ஆடிப்பாடி வருபவர்
மோட்சம் பெற முக்தி பெற பாட்டுப்பாடி
துள்ளி ஆடும் சாமி பக்தருக்கருள் புரிவான்
என் ஐயா பொன் ஐயா ஐயப்பனே
சரணம் சரணம் சரணம் சாமியே (கன்னி)

O O O

சுவாமி சங்கீத தேன் பொழியும்
ஏழிசை பாடகன் ஐயா - யான் (சுவாமி)

ஜெபமாலையாய் எந்தன் கைகளில்
மந்திர சுதி மீட்டும் தம்புறு கொண்டேன்
சுவாமி ஐயப்பா சுவாமி சபரிமலை சுவாமி (சுவாமி)

ப்ரம்மயாமத்தில் பூசை நேரத்தில் சன்னதியில் யான் இருந்து
பொன்னம்பல வாசன் ஐயப்பன் - உந்தன்
புண்யாஷரம் மந்திரம் பாடி - தேவா
புவிமறந்திருப்பேன் யான் புலி மறந்திருப்பேன் (சுவாமி)

மனிதராய் வாழ்வதில் யாவரும் ஒன்றென
மணிகண்ட சுவாமி அருள் செய்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதபேதங்களும் மாய்ந்திட வேண்டுமென்னும்
மதி நலம் தரும் உரையான் கேட்டேன் (சுவாமி)

சீர் மேவும் தத்துவம் என்குரல் நாதத்தில்
பாரெங்கும் பரவிட இசைப்பேன்
ஆர்வத்தினாலேயான் பாட மனத்திரையில்
தேவா உன் உருவம் நிலைக்கும்
குளமெனும் பெரும் கோவில் உனக்காகவே (சுவாமி)

ೲ ೲ ೲ

என்மனம் பொன்னம்பலம் அதில் உனது எழில்ரூபம்
எனது நாவில் உன் திருநாமம் புண்ய நெய்வேத்யம் (என்)

கனவிலும் என் நினைவிலும் தினம் செய்யும் கடமையிலும்
உனது தீபம் ஒளியைக் காட்டும் கருணையே புரிவாய்
அடியேன் நாடிடும் இனிய தெய்வம் சபரிமலை வாழும்
அகிலாண்டேசுவரன் ஐயன் ஐயன் சரணம் ஐயப்பா (என்)

பகலிலும் காரிருளிலும் மனக்கோயில் மூடேனே
யுகம் ஓராயிரம் ஆயினும் யான் தொழுது தீரேனே
இனி எனக்கொரு பிறவி வாய்ப்பினும் பூசை முடிப்பேனோ
எளியோர்க்கு நீ மோட்சம் தாராய் தீணரஷகனே (என்)

ೲ ೲ ೲ

எல்லாத் துன்பமும் தீர்த்திடுவாய் பொன் ஐயா சபரிவாசா
(எல்லா)

பொல்லா நோய்களும் நீங்கிடவே
மலர்க்கையால் அருள்புரிவாய் - தேவா எம்மை ஆதரிப்பாய்
(எல்லா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழாய் நாளைப் போக்காமல் உன்
நாமம் நாவால் உரைப்போமே
மாயாலோக வாழ்க்கையில் மதபேதப்
பேய்கள் ஓட்டிடுவோம் போகம் தேடி அலைந்து
திரிவோரி ஒரு கண சுகமென அறியாரே (எல்லா)

கைகளும் கால்களும் தளர்ந்திடவே
மனமதும் அவதியில் துடித்திடவே
அகிலாண்டேசுவரா அபயம் நீ என்று
அறிந்திட்டோம் நாங்கள் அழைக்கின்றோம்
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா (எல்லா)

○ ○ ○

சபரிமலைவாசா தேவா சரணம் நீ ஐயப்பா - தேவா
சபரிமலைவாசா தேவா சரணம் நீ ஐயப்பா - தேவா
உறவு எல்லாம் சுவாமி உண்மையில்லை சுவாமி
உறவு எல்லாம் இங்கே உண்மையில்லை
பிறவிப் பயன் பெற அருள் ஈசா (சபரிமலை)

வாழ்க்கை எனும் பயணம் காரிருளில் ஐயா
வழி அறியாதலையும் நேரம் - உன்
திருதீபத்தின் பொன்னொளி காட்டியே
அருள்மழை பொழிகுவாய் ஐயப்பா - உன்னை
அடைந்திட வழி செய்வாய் மெய்யப்பா (சபரிமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தபந்தங்கள் காத்திட அலையும்
வாழ்க்கையை வாழ்ந்திடல் தேவையோ
சூன்யமன்றோ கானல் நீரல்லவோ வாழ்க்கை
நித்தியமானவன் நீயன்றோ என்றும்
சத்தியமானவன் நீயன்றோ (சபரிமலை)

சபரிஜயனே நேசா சபரி ஜயனே நேசா - தேவா
சரணாகதி அடைந்தேன் ஜயா (சபரி)

திருவடிதான் எனது துணை அருளும் நாயகா ஐயப்பா
ஐயப்பா சரணம் சரணம் பொன்ஐயப்பா (ஐய்யப்பா)
சபரிகிரீசா சரணம் சரணம் சரணம் ஐயப்பா (சபரிகிரீ (சபரி)

மனசந்தனாபிஷேக தயாபரா
ஹரிஹரன் மைந்தனே ஐயப்பா
தவம் செய்ய அறியேன் தாளினை அடைந்தேன்
மனமிரங்கும் சாமிபக்தன் யான் (ஐயப்பா)

மணிகண்டா மகிஷிவர்தனா
புனித தெய்வமே தூயவனே
கலியுகவரதா காத்திடும் துணைவா
வரமே தருவாய் புருஷோத்தமா (சபரி)

O O O

பம்பா கணபதி அன்பின் அதிபதி
நன்மை அருள்கின்றாய்
அய்யன் மலை வரும் மாந்தரின்
இனத்தை வாழ்த்திட நீயுள்ளாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி சோதரனாகின்றாய் - துயரினை
நீக்கியே காக்கின்றாய் (பம்பா)

தடை என்ன வந்தாலும் உடைக்கின்ற தேங்காய்
கடும் பக்தி விரதத்தால் அவையாகும்
அருளெனும் சொல்லுக்கே பொருளாக ஆகின்ற
அன்னையின் ரூபமே முன்னிற்கும் - கண்டு
பூப்போல கைகளும் வணங்கி நிற்கும்
பிரேதாயுகம் கண்ட அவதார மாமன்னன்
சீதாபதி ராமன் இருக்கின்றான்
அழகிய ராமனின் அடிபோற்றும் மாருதி
பக்தர்களில் ஒருவன் போல் நிற்கின்றான்
என்றென்றும் மாறாத பக்திக்கு அருள்கின்றான் (பம்பா)

உதித்தங்கே ஒளிவிளக்காக உத்தரநட்சத்திரம் சாமியே
சரணம்
தெறித்த ஒளியில் திருவிளக்காக தெய்வம் உன் அம்சம்
ஐயப்ப சரணம்
குவித்தகரங்கள் கேட்கிற வரங்கள் கொடுக்கும் அருளம்சம்
(உதித்த)

கலியுகவரதன் காலடிசேர்ந்தால் காணும் பேரின்பம்
தெளிவுறும் மனது தேறிடும் பொழுது தேய்ந்திடும் துன்பம்
மலரடி தொழுதேன் மனம் விட்டு அழுதேன்
மணிகண்டன் சன்னதியில் (உதித்த)

இருமுடி ஏந்தி திருவடிதேடி வருவேனே ஐயா
கரிமலை மேலே வரும் வழிபார்த்து காத்திடுவேன் ஐயா
தேக பலம்தா பாதபலம்தா தேடிவரும் நேரம் (உதித்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிற்ரஹீம்
# வாபர்சாமி பாடல்

லாஹிலாஹோ இல்லல்லா
வாபர் முகமது ஸல்லல்லா
எரிமேலி நாங்கள் வந்தல்லோ
கரும்புள்ளி செம்புள்ளி இட்டல்லோ (லாஹி)

மாமலை சபரியில் வாழ்ந்தவரே
மணிகண்டன் நண்பராய் ஆனவரே
அஞ்சா நெஞ்சம் கொண்டவரே
அல்லாஹ்வின் இறையடி சென்றவரே (லாஹி)

எதிர்த்தவர்கள் யாரையும் வென்றவரே
இல்லாதவர்க்கு தந்தவரே
இஞ்சிப்பாறையை ஆண்டவரே
எரிமேலியில் குடிகொண்டவரே (லாஹி)

வீரமும் தீரமும் கொண்டவரே
எரிமேலி பேட்டையை ஆண்டவரே
முன்னும் பின்னும் துணைவருவார்
கன்னிமார்களை காத்திடுவார் (லாஹி)

இருமுடி தூக்கி வந்திடுவோம்
உன்னிடம் பேட்டைத் துள்ளிடுவிடும்
வாபர் சாமி திந்தகத்தோம் (லாஹி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

சபரிமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
தவமுனிவர் போற்றும் அந்த சன்னிதிக்கு மங்களம்
இப முகவன் முருகனுக்கு இளையவனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்
புலிமிசையே பவனிவரும் புனிதனுக்கு மங்களம்
புவிமயங்கும் மோகினியான் புதல்வனுக்கு மங்களம்
அன்புடனே அருள்புரியும் ஐயனுக்கு மங்களம்
அழகே உருவான எங்கள் மெய்யனுக்கு மங்களம்
வெற்றிதரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணிகண்டனுக்கு மங்களம்
பம்பை நதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தள பேர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒமேகாவின் ஏனைய சிறுவர் புத்தகங்கள்

- முல்லா கதைகள்
- பீர்பால் கதைகள் - 1
- பீர்பால் கதைகள் - 2
- பரமார்த்த குரு கதைகள்
- குழந்தைகளுக்கான குட்டிக் கதைகள்
- பண்பூட்டும் பழங்கதைகள்
- சிறுவர்களுக்கான நீதிக் கதைகள்
- தென்னாலிராமன் கதைகள்
- ஈசாப் கதைகள் - 1
- ஈசாப் கதைகள் - 2
- பிரபலமான ஈசாப் கதைகள்
- நீதி புகட்டும் ஈசாப் கதைகள்
- அப்பாஜி கதைகள்
- மரியாதை ராமன் கதைகள்
- மனம் கவரும் மரியாதை ராமன் கதைகள்
- ஆர்வமூட்டும் அரிய கதைகள்
- நன்னெறிக் கதைகள்
- பஞ்ச தந்திரக் கதைகள் - பாகம் 1
- பஞ்ச தந்திரக் கதைகள் - பாகம் 2
- சிறுவர்களுக்கான நீதி கதைகள் 1 - 7
- நீதி கதைகள் 1 - 10
- சிறுவர்களுக்கான மகாபாரதக் கதைகள்
- சிறுவர்களுக்கான இராமாயணக் கதைகள்
- சிறுவர்களுக்கான நாலடியார் கதைகள்
- சிறுவர்களுக்கான சிலப்பதிகாரம்
- அம்புலிமாமா கதைகள்
- சிறுவர்களுக்கான புராணக் கதைகள்
- சிறுவர்களுக்கான அரிச்சந்திரன் கதைகள்
- ஔவையாரின் ஆத்திசூடி
- அறிவைக் கூர்தீட்டும் சிறுவர் கதைகள்
- புத்தி புகட்டும் சிறுவர் கதைகள்
- பாடம் புகட்டும் நன்னெறிக் கதைகள்
- சிறுவர்களுக்கான பண்புக் கதைகள்
- சிறுவர்களுக்கான பழமொழிக் கதைகள்
- தெனாலிராமன் நகைச்சுவை நாடகங்கள்
- கதையின் மூலம் திருக்குறளை அறிவோம்
- மாணவர்களுக்கான விதவிதமான கதைகள்
- ஐயப்பன் பாமாலை
- பாரதியார் பாடல்கள்
- சுண்டெலிராசன் கதைகள்

ஒமேகா வெளியீடு
ஒமேகா கணித விஞ்ஞான வள நிலையம்
478/31B, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15.
தொ.பே: 0112-524906, 0778-143271

விலை: ரூ. 180.00

ISBN 978-955-20-1427-7
9 789552 014277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org